
தினபூமி
thinaboomi.com
பூமி: 22 சுற்று: 07 மார்கழி 19
RNI Regn. No. 61494/94
வேலூர், சனி, ஜனவரி 03, 2026
‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**மனித மூளையில் பொருத்தும் நியூராலிங்க் சிப் உற்பத்தியை அதிகரிக்க எலான் மஸ்க் முடிவு**
....2-ம் பக்கம்

**கேரளா, வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட 300 பேருக்கு பிப்ரவரியில் வீடுகள் ஒப்படைப்பு**
...3-ம் பக்கம்

**இந்திய மகளிர் ஹாக்கி அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக ஸ்ஜோர்ட் மரிஜ்னே நியமனம்**
....6-ம் பக்கம்





தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திருச்சியில், மதநல்லிணக்கம், போதைப்பொருள் ஒழிப்பு போன்றவற்றை வலியுறுத்தி, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மேற்கொள்ளும் சமத்துவ நடைபயணத்தை தொடங்கி வைத்தார். அருகில் அமைச்சர் கே.என்.நேரு, தி.மு.க. கூட்டணி கட்சி நிர்வாகிகள், துரை வைகோ உள்ளனர்.

### சமத்துவ நடைபயணம் என்ற பெயரில்

# திருச்சியில் இருந்து வைகோ நடைபயணம்: முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்

திருச்சி, ஜன. 03-

**ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் சமத்துவ நடைபயணத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை தொடக்கிவைத்தார்.**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பு இன்னும் ஓரிரு மாதங்களில் வெளியாகவுள்ள நிலையில், மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி திருச்சியில் இருந்து மதுரைக்கு சமத்துவ நடைபயணத்தை வைகோ மேற்கொள்கிறார்.

நாள்தோறும் 15 முதல் 17 கிலோ மீட்டர் நடைபயணம் மேற்கொள்ளவுள்ள வைகோ, வருகின்ற 12-ம் தேதி மதுரையில் பயணத்தை நிறைவு செய்கிறார்.

இந்நிலையில் திருச்சி தென்னூர் அண்ணா நகர் உழவர் சந்தை திடலில் நேற்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் சமத்துவ நடைபயணத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை தொடக்கி வைத்தார்.

திருச்சியில் நடைபெற்ற நடைபயணத்தின் தொடக்க விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி மக்களவைத் தொகுதி உறுப்பினர் துரை வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொகிதீன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### மிகப்பெரிய நெட்வொர்க்காக செயல்பட்டு வரும் போதைப்பொருட்களை ஒழிக்க வேணடுமெனில்

# மாநில அரசுகளும், மத்திய அரசும் இணைந்து செயல்பட வேண்டும்

## திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜன. 03-

**போதைப்பொருள் என்பது மிகப்பெரிய நெட்வொர்க். அந்த நெட்வொர்க்கை அழிக்க வேணடுமெனில் அனைத்து மாநில அரசுகளும், மத்திய அரசும் இணைந்து செயல்பட வேண்டும் என திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

**சமத்துவ நடைபயணம்**

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ திருச்சியில் நேற்று சமத்துவ நடைபயணத்தை தொடங்கினார். இதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். பின்னர் அவர் பேசியபோது, இளைஞர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் போதைப் பொருளை ஒழிக்க, அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. முழுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவு பலன் கிடைத்துள்ளது. போதைப்பொருள் என்பது மிகப்பெரிய நெட்வொர்க். அந்த நெட்வொர்க்கை அழிக்க மாநில அரசுகளும், மத்திய அரசும் இணைந்து செயல்பட வேண்டும்.

> ஊரே ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக இருந்த காலம் சென்று, இப்பொது ஒருவருக்கு ஒருவர் எதிரியாக கட்டமைக்கும் வேலையை சில மதவாதசக்திகள் செய்து வருகின்றன. அன்பு செய்ய சொல்லித் தர வேண்டிய ஆன்மிகத்தை, சில கும்பல் வம்பு செய்வதற்காக பயன்படுத்துகிறார்கள்.
> - முதல்வர் மு.க.ஸ்டாலின்

**போதை வஸ்துகள்...**

போதை பழக்கத்துக்கு அடிமையானவர்கள் அதன் பாதிப்பை அறிந்து கொண்டு அதனை கைவிட வேண்டும். அவர்களுடன் இருப்பவர்கள் அவர்களை திருத்த வேண்டும். ஏராளமான போதை வஸ்துகள் நாட்டுக்குள் வருகின்றன. இந்த நுழைவு வாயில்களை அடைத்தாக வேண்டும். நாட்டோட எல்லைக்குள் போதைப்பொருள் வருவதையும், மாநிலம் விட்டு மாநிலம் கடத்தப்படுவதையும் மத்திய அரசு கண்காணித்து தடுக்க வேண்டும்.

**1 லட்சத்துக்கும்...**

தமிழக காவல்துறை நடத்திய சோதனையில், திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டையில் இருந்து 1 லட்சத்துக்கும் அதிகமான போதை

(கடைசி பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் 2.22 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு

# ஜனவரி 8-ம் தேதி பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம் தொடக்கம்

சென்னை, ஜன. 03-

**தமிழகத்தில் 2.22 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பை வரும் 8ம் தேதி, முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைக்கிறார். ரொக்கப் பணம் குறித்த அறிவிப்பும் விரைவில் வெளியாகவுள்ளது.**

பொங்கல் பண்டிகையையொட்டி, 2.22 கோடி ரேஷன் அரிசி கார்டுதாரர்களுக்கு, பொங்கல் பரிசு தொகுப்பை தமிழக அரசு நேற்று முன்தினம் அறிவித்தது. இதில், தலா 1 கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு ஆகியவை இடம்பெற்றுள்ள நிலையில், ரொக்கப் பணம் குறித்த தகவல் இல்லை. ரேஷன் கார்டு தாரர் களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பரிசு தொகுப்பை அரசு வழங்குகிறது. கடந்த ஆண்டு பொங்கலுக்கு, கார்டுதாரர்களுக்கு தலா 1 கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு அடங்கிய பரிசு தொகுப்பு வழங்கப்பட்டது. இதில், பணம் இடம்பெறவில்லை.

இரு வாரங்கள் இந்த ஆண்டு ஏப்ரலில், தமிழக சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. எனவே, இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு, 3,000 ரூபாய் ரொக்கப் பணத்துடன், 1 கிலோ பச்சரிசி, சர்க்கரை, கரும்பு ஆகியவை வழங்க, அரசு முடிவு செய்தது. அதேசமயம், 'பொங்கல் பரிசாக, 5,000 ரூபாய் வழங்க வேண்டும்' என, எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன

இந்நிலையில், ஆங்கிலப் புத்தாண்டு பிறந்த நிலையில், பொங்கலுக்கு இரு வாரங்களே உள்ளன. எனவே, சர்க்கரை, பச்சரிசியை ரேஷன் கடைகளுக்கு அனுப்பும் பணியில், தமிழக நுகர்பொருள் வாணிப கழகம் ஈடுபட்டுள்ளது. அதேசமயம், கரும்பு கொள்முதல் செய்ய, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. இதையடுத்து, 2.22 கோடி அரிசி கார்டுதாரர்களுக்கு, பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குவதற்கான அரசாணையை, கூட்டுறவு மற்றும் உணவுத் துறை செயலர் சத்யபிரதா சாஹு நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார். அதில், ரொக்கப் பணம் குறித்த தகவல் இல்லை.

அரசாணையில், 'பொங்கல் பரிசு தொகுப்பாக, 1 கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழு நீள கரும்பு ஆகியவற்றை, மொத்த செலவினத் தொகை 248.66 கோடி ரூபாய்க்கு கொள்முதல் செய்து, ரேஷன் கடைகள் வாயிலாக, 2.22 கோடி கார்டுதாரர்களுக்கு வினியோகம் செய்ய, நிதி ஒதுக்கி அரசு ஆணையிடுகிறது' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொங்கல் பரிசில், தலா ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கு 3,000 ரூபாய் வழங்க முடிவு செய்யப்பட்டது. கடைசி நேரத்தில், 5,000 ரூபாய் வழங்கலாமா என, அரசு தரப்பில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. அந்த தொகையை வழங்கினால் ஏற்படும் செலவை எப்படி ஈடு செய்வது என, நிதித்துறை ஆலோசித்து வருகிறது. பொங்கல் பரிசு தொகுப்பை, கார்டுதாரர்களுக்கு வரும் 8ம் தேதி, முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைக்கிறார். எனவே, ரொக்கப் பணம் குறித்து முடிவு செய்து, தனி அரசாணை வெளியிடப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

### வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க

# தமிழ்நாடு முழுவதும் இன்று சிறப்பு முகாம்

சென்னை, ஜன. 03-

**வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க தமிழகம் முழுவதும் 2-ம் கட்டமாக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் இன்று சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. வாய்ப்பை பயன்படுத்தி பயன்பெறுமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.**

எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கு பிறகு தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19-ந் தேதி வெளியிடப்பட்டது. அதில் 97 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். அவர்களில் 66 லட்சம் பேர் இடம் மாறி சென்றவர்களாக காட்டப்பட்டு உள்ளனர். அவர்கள் வாக்காளராக சேர்வதற்கு ஒரு மாத காலம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 18-ந் தேதி கடைசி நாள்.


இதனிடையே, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் செய்ய 4 நாட்கள் சிறப்பு முகாம் நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அறிவித்து இருந்தார். அதன்படி, இந்த சிறப்பு முகாம் முதற்கட்டமாக கடந்த சனி, மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது.

இந்த நிலையில் 2-ம் கட்டமாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் மேற்கொள்ள இன்றும், நாளையும் ஆகிய இரு தினங்கள் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

முழுவதும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் இந்த சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள், இந்த வாய்ப்பை பயன்படுத்தி பயன்பெறுமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.





**மார்க்கெட் விலை நிலவரம்**



BSE ↓ 573.41 பாயிண்ட் 85,762.01
NSE ↓ 182.00 பாயிண்ட் 26,068.15



**தங்கம்** 1 சவரன் ₹100,640 | 1 கிராம் ₹12,580



**வெள்ளி** 1 கிலோ ₹260,000 | 1 கிராம் ₹260.00

**டாலர்** ₹90.10

**பெட்ரோல்** ₹100.75 | **டீசல்** ₹92.34

### மனித மூளையில் பொருத்தும்

# நியூராலிங்க் சிப் உற்பத்தியை அதிகரிக்க எலான் மஸ்க் முடிவு



**நியூயார்க், ஜன. 03-**

மனித மூளையில் பொருத்தும் நியூராலிங்க் சிப் உற்பத்தியை நடப்பு ஆண்டில் (2026) அதிகரிக்க திட்டம் இருப்பதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க்கின் நியூராலிங்க் நிறுவனம் உடலளவில் செயலிழந்தவர்களின் எண்ணங்களை செயல்படுத்தும் வகையில் மூளைக்கும், கணினிக்குமான இன்டெர்ஃபேஸ் (BCI) இணைப்பை உருவாக்கும் வகையிலான 'சிப்'-ஐ மனித மூளையில் பொருத்தி சோதனையை மேற்கொண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் குரங்குகளை வைத்து இந்த சோதனையை நியூராலிங்க் நிறுவனம் செய்திருந்தது.

இதுவரை 12 பேருக்கு நியூராலிங்க் நிறுவனம் சிப் பொருத்தி உள்ளது. இதை அந்நிறுவனம் கடந்த நவம்பரில் தெரிவித்திருந்தது. கடந்த 2024-ல் நோலண்ட் அர்பாக் என்பவருக்கு முதல் சிப்-இனை நியூராலிங்க் நிறுவனம் பொருத்தியது. அந்த சிப்பை பொருத்திக் கொண்டதன் மூலம் தன் வாழ்வில் தான் சந்தித்த மாற்றங்களை கடந்த ஆகஸ்ட் மாதம் நோலண்ட் அர்பாக் பகிர்ந்திருந்தார்.

உடல் அசைவு செயலிழப்பால் பாதிக்கப்பட்ட தன்னால் கணினி, ஏர் பியூரிபையர், தொலைக்காட்சி உள்ளிட்ட டிஜிட்டல் சாதனங்களை கட்டுப்படுத்த முடிவதாக அவர் அப்போது தெரிவித்திருந்தார். இந்நிறுவனத்தின் சிப் இந்த வகை பாதிப்பு கொண்ட மக்கள் டிஜிட்டல் சாதனங்களை கட்டுப்படுத்த உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

"பிசிஐ சிப் உற்பத்தியை அதிகரிக்கும் பணியில் நியூராலிங்க் நிறுவனம் தொடங்கியுள்ளது. 2026-ல் தானியங்கி அறுவை சிகிச்சை முறையில் சிப் பொருத்தும் பணியை மேற்கொள்ளும் திட்டம் உள்ளது. இந்த சிப்களை பொருத்த பயன்படுத்தும் திரெட்களை அகற்ற வேண்டியதில்லை" என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

# ஈரானில் வன்முறை-7 பேர் பலி

**தெஹ்ரான், ஜன. 03-**

ஈரானில் அரசுக்கு எதிராக பொதுமக்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியது. இதில் 7 பேர் பலியானார்கள்.

ஈரானில் கடந்த சில ஆண்டுகளாக பொருளாதார நெருக்கடி இருந்து வருகிறது. டாலருக்கு நிகரான ரியால் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. அமெரிக்க டாலருக்கு நிகரான ஈரான் நாட்டின் நாணயமான ரியால் மதிப்பு வரலாறு காணாத வகையில் சரிந்தது. பணவீக்கத்தால் அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது. இதையடுத்து ஈரானில் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டங்களில் குதித்தனர். கடந்த 28-ந் தேதி தொடங்கிய இப்போராட்டம் தற்போது தீவிரமடைந்து வருகிறது. முதலில் தலைநகர் தெஹ்ரானில் தொடங்கிய போராட்டம், நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவியது. குறிப்பாக கிராமப்புற மாகாணங்களில் போராட்டங்கள் நடந்தது.

இந்த நிலையில் ஈரானில் நடந்து வரும் போராட்டங்களில் வன்முறை வெடித்தது. பல இடங்களில் போராட்டக்காரர்களை போலீசார் தடுத்ததால் மோதல் ஏற்பட்டது. தலைநகர் தெஹ்ரானில் இருந்து 300 கி.மீ தொலைவில் உள்ள அஸ்னா நகரில் மக்கள் சாலைகளில் பொருட்களை போட்டு எரித்தனர். அங்கு போலீசாருடன் போராட்டக்காரர்கள் மோதலில் ஈடுபட்டனர். அப்போது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. அதேபோல் ஈரானின் சஹார் மஹால் மற்றும் பக்தியாரி மாகாணத்தில் நடந்த போராட்டங்களில் பாதுகாப்பு படையினர் துப்பாக்கி சூடு நடத்தியதாக தெரிகிறது. ஈரானில் போராட்டம்-வன்முறையில் 7 பேர் பலியாகி உள்ளனர்.

## அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

ஈரான் தனது வழக்கமான பாணியில் அமைதியான போராட்டங்களுக்கு எதிராக வன்முறையை பயன்படுத்தி போராட்டக்காரர்களை கொடூரமாக சுட்டுக் கொன்றால், போராட்டக்காரர்களின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா களத்தில் இறங்கி பதிலடி கொடுப்பதற்கு தயாராக உள்ளது என அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

### சென்னையில் 4, 5-ம் தேதிகளில்

# முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்கள் நேரில் விநியோகம்

### இல்லம் தேடி சென்று வழங்க உத்தரவு

**சென்னை, ஜன. 03-**

சென்னையில் ஜனவரி 4, 5-ல் 15 மண்டலங்களில், 990 ரேசன் கடைகளின் விற்பனையாளர்கள் ரேசன் பொருட்களை முதியோர், மாற்றுத்திறனாளிகளின் வீடு தேடி சென்று விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் கூட்டுறவு துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஜனவரி மாதத்தின் 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் சென்னையில் அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையாறு, திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் 990 நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள் அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தவறாக புரிந்து கொள்வதை தடுக்க

# மற்றவர்களுடன் நாம் தொடர்பு கொள்வது முக்கியம்: ஜெய்சங்கர்

**சென்னை, ஜன. 03-**

உங்களைப் பற்றி மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொள்வதைத் தடுப்பதற்கான வழி, தொடர்புகொள்வதுதான். நீங்கள் சிறப்பாகவும், தெளிவாகவும் தொடர்புகொண்டால் மற்றவர்கள் அதை மதித்து ஏற்றுக்கொள்வார்கள் என்று சென்னை ஐ.ஐ.டி.-யில் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் பேசினார்.

சென்னை ஐ.ஐ.டி. மாணவர்களுடன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உரையாடினார். அப்போது "உங்களைப் பற்றி மற்றவர்கள் தவறாகப் புரிந்துகொள்வதைத் தடுப்பதற்கான வழி, தொடர்புகொள்வதுதான். நீங்கள் சிறப்பாகவும், தெளிவாகவும், நேர்மையாகவும் தொடர்புகொண்டால், மற்ற நாடுகளும் மற்ற மக்களும் அதை மதித்து ஏற்றுக்கொள்வார்கள் என்றார்.

மேலும், "உலகம் முழுவதும் உள்ள பல மக்கள் தங்கள் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் மரபு குறித்துப் பெருமை கொள்கிறார்கள். நாம் பெருமை கொள்ளாமல் இருப்பதற்கு எந்தக் காரணத்தையும் நான் காணவில்லை. நவீன காலத்தின் முக்கிய தேசங்களாக நிலைத்து நிற்கும் பழங்கால நாகரிகங்கள் உண்மையில் மிகச் சிலவே உள்ளன. அவற்றில் நாமும் ஒன்று" என்றார்.

# என் உடல்நிலை சீராகவே உள்ளது: ட்ரம்ப் விளக்கம்

**வாஷிங்டன், ஜன. 03-**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் உடல்நிலை பற்றி பல்வேறு விவாதங்களும் எழுந்துவரும் நிலையில். 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகைக்கு அதிபர் ட்ரம்ப் அளித்துள்ள பேட்டியில் தனது உடல்நிலை பற்றி தெளிவுபடுத்தியுள்ளார்.

முன்னதாக, ட்ரம்ப்பின் வலது கையில் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் அதை மறைக்க அவரது கையில் மேக் - அப் பூசப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் பரவி அது குறித்த விவாதங்களும் எழுந்தன. அண்மையில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை, ட்ரம்ப் வரவேற்றபோது வெளியான புகைப்படங்களில் ட்ரம்ப்பின் வலது கையில் வெள்ளை நிற பேட்ச், ஏற்கெனவே இருந்த விவாதங்களுக்கு மேலும் தீனி போட்டது. ட்ரம்ப்புக்கு இப்போது 79 வயது. அவர் பதவிக்காலத்தை முடிக்கும்போது 82 வயதாகும். முந்தைய அதிபர் ஜோ பைடன் தான் அமெரிக்க அதிபர் வரலாற்றிலேயே அதிக வயது கொண்ட நபராக இருந்த நிலையில், அந்தச் சாதனையை ட்ரம்ப் முறியடிக்கக்கூடும்.

இந்நிலையில் ட்ரம்ப் அளித்த தொலைபேசி பேட்டி வருமாறு: என உடல்நிலை சீராக உள்ளது. நான் தினமும் 325 மில்லி கிராம் அளவிலான ஆஸ்பிரின் மாத்திரையை உட்கொள்கிறேன். சிலர் அது அதிகம் என்கிறார்கள். நான் மருத்துவர் பரிந்துரையின்படியே அதனை எடுக்கிறேன். அதை எடுக்காவிட்டால் ரத்தம் அடர்த்தி மிகுமாம். எனக்கு எனது இதயத்துக்குள் நல்ல மெலிதான ரத்தமே செல்ல வேண்டும் என விரும்புகிறேன். அதனால் ஆஸ்பிரின் எடுக்கிறேன். நான் நீண்ட கால பழக்கங்களைக் கைவிட விரும்புவதில்லை. எனக்கு கொஞ்சம் மூடநம்பிக்கை அதிகம்.

நான் செய்யும் ஒரே ஒரு உடற்பயிற்சி கோல்ஃப் விளையாடுவது தான். அதுவும் நான் வார நாட்களில் விளையாடுவது இல்லை. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நான் ஒரு ஸ்கேன் எடுத்துக் கொண்டேன். அதுவும் கூட எல்லோரும் சொல்வது போல் எம்ஆர்ஐ ஸ்கேன் அல்ல வெறும் சிடி ஸ்கேன் தான். அது வழக்கமான உடல்நிலை பரிசோதனைக்கானது என்றார்.

# ரஷ்ய பகுதியில் உக்ரைன் நடத்திய டிரோன் தாக்குதலில் 24 பேர் பலி

**கீவ், ஜன. 03-**

ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட உக்ரைனின் தெற்கு கெர்சன் பிராந்தியத்தில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்றது. அப்போது அங்குள்ள ஒரு ஓட்டலில் உக்ரைன் படைகள் நடத்திய டிரோன் தாக்குதலில் ஒரு குழந்தை உள்பட 24 பேர் கொல்லப்பட்டனர்.

உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் ஆண்டுக்கணக்கில் நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். உக்ரைனின் பல்வேறு பகுதிகளை ரஷ்ய ராணுவம் ஆக்கிரமித்துள்ளது. இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சித்து வருகிறார். இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளும் நடந்து வருகின்றன.இந்நிலையில், ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட உக்ரைனின் தெற்கு கெர்சன் பிராந்தியத்தில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்றது. அப்போது அங்குள்ள ஒரு ஓட்டலில் உக்ரைன் படைகள் நடத்திய டிரோன் தாக்குதலில் ஒரு குழந்தை உள்பட 24 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 50-க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். டிரோன்கள் வாயிலாக தாக்குதல் நடத்தப்பட்டதற்கு ரஷ்ய வெளியுறவுத்துறை கண்டனம் தெரிவித்துள்ளது.

# தங்கம் விலை மீண்டும் ரூ.1 லட்சத்தை கடந்தது

**சென்னை, ஜன. 03-**

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜன.2) சென்னையில் பவுனுக்கு ரூ.1,120 என உயர்ந்துள்ளது. இதனால் மீண்டும் ஒரு பவுன் தங்கம் விலை ரூ.1 லட்சத்தை கடந்துள்ளது.

கடந்த டிச.27-ல் ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 4 ஆயிரத்து 800 ஆக உயர்ந்து, வரலாறு காணாத புதிய உச்சத்தை தொட்டது. அதன்பின் விலை குறையத் தொடங்கியது. தொடர்ந்து 4-வது நாளாக நேற்றும் விலை குறைந்தது. அதன்படி பவுனுக்கு ரூ.320 குறைந்து, ரூ.99,520-க்கு விற்கப்பட்டது.

இந்நிலையில், தங்கம் விலை நேற்று சென்னையில் மீண்டும் உயர்ந்து விற்பனையானது. 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று கிராமுக்கு ரூ.140 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.12,580-க்கும், பவுனுக்கு ரூ.1,120 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,00,640-க்கும் விற்பனையானது. 24 காரட் தங்கம் ஒரு பவுன் ரூ.1,09,792-க்கு விற்பனையானது. சென்னையில் நேற்று வெள்ளி விலை கிராமுக்கு ரூ.4 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.260-க்கு விற்பனையானது. ஒரு கிலோ வெள்ளியின் விலை ரூ.4,000 உயர்ந்து, ரூ.2,60,000-க்கு விற்பனையானது.

# இயேசு ஓவியத்தை ஏலம் விட்டு ரூ.23 கோடி நிதி திரட்டிய ட்ரம்ப்




**நியூயார்க், ஜன. 03-**

புத்தாண்டு கொண்டாட்ட விழாவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொண்டு நிறுவனத்திற்கு நிதி திரட்டும் ஏலத்தில் இயேசு ஓவியத்தை சுமார் ரூ.23 கோடிக்கு விற்றார்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள டொனால்ட் ட்ரம்ப்பிற்கு சொந்தமான 'மார்-ஏ-லாகோ' இல்லத்தில் ஒரு தொண்டு நிறுவன ஏல நிகழ்ச்சி நடைபெற்றது. வெனெசா ஹோரபியூனா என்ற பிரபல கிறிஸ்தவ ஆன்மீக ஓவியர், மேடையிலேயே இசைக்கு ஏற்ப நடனமாடியபடி இயேசுவின் உருவப்படத்தை வரைந்தார்.

இந்நிலையில், புத்தாண்டு கொண்டாட்ட விழாவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொண்டு நிறுவனத்திற்கு நிதி திரட்டும் ஏலத்தில் இயேசு ஓவியத்தை சுமார் ரூ.23 கோடிக்கு விற்றார். ட்ரம்ப் அந்த ஓவியத்தில் தனது கையெழுத்தைப் போட்ட பிறகு, அதன் மதிப்பு உயர்ந்து இறுதியில் $2.75 மில்லியன் டாலருக்கு ஏலம் போனது. இதன் இந்திய மதிப்பு சுமார் ரூ. 23 கோடி ஆகும். வெனெசா ஹோரபியூனா என்ற ஓவியர் வரைந்த இந்த ஓவியத்தின் தொடக்க விலை ரூ.8.5 லட்சமாக இருந்தது. இந்த ஏலத்தின் மூலம் கிடைத்த தொகை முழுவதையும் ட்ரம்ப் செயின் ஜூடே குழந்தைகள் மருத்துவமனை மற்றும் ஒரு உள்ளூர் ஷெரிப் அலுவலகத்தின் தொண்டு பணிகளுக்காக வழங்கப்பட்டது.

**03-01-2026**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பல வழிகளிலும் பணம் வந்து மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். பெண்கள் விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:-** குடும்பத்தின் ஆசைகளைத் தீர்க்க நினைத்தால் செலவுகள் அதிகமாகும். உங்கள் உண்மையான உழைப்பு விழலுக்கு இறைத்த நீராகும். நண்பர்களிடம் பகைமை பாராட்டாது இருப்பது நல்லது.

**மிதுனம்:-** தன்னம்பிக்கை அதிகரித்து, தனலாபம் பெருகும். மனைவியின் ஒத்துழைப்பால் மனம் மகிழும். வியாபாரிகளுக்கு விரிவாக்கத் திட்டங்கள் மூலம் ஆதாயம் அதிகரிக்கும்.

**கடகம்:-** வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் வீட்டில் நிம்மதி நிலவும். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது அவசியமாகும். தொழிலில் அதிக முதலீடு செய்யாதிருப்பது நல்லது.

**சிம்மம்:-** கணவன் மனைவி ஒற்றுமையாக, குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். பதவி உயர்வு வாகன யோகம் ஏற்படும். தர்ம காரிய ஈடுபாடு வாழ்க்கையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும்.

**கன்னி:-** நண்பர்கள் தேவை அறிந்து செயல்படுவீர்கள். வீடு வாங்கும் முயற்சியில் இறங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பால் பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**துலாம்:-** வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். புனித யாத்திரைகள் மன மகிழ்ச்சியுடன் சென்று வருவீர்கள். .பலவழிகளிலும் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். கனிவான பேச்சால் காரியங்களை சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்:-** பெண்களால் வீண் செலவுகள் அதிகரிக்கும். மனைவியின் கோபத்தால் உறவுகளிடையே குழப்பமும், பிரிவும் ஏற்படலாம். உயர்வு வரும்போது பணிவு அவசியம். அனுகூலமான ஆதாயங்கள் கிடைக்கும்.

**தனுசு:-** பெண்களால் இலாபம் ஏற்படும். பிள்ளைகளின் கல்வியில் ஏற்படும் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். பிரிந்த உறவுகள் ஒன்று சேரும். எல்லா வகையிலும் சந்தோஷம் அதிகரிக்கும்.

**மகரம்:-** சுகம், சந்தோஷம், பயணத்தில் உல்லாசம் ஆகியவை ஏற்படும். தனவரவு கூடும். நோய் நீங்கி ஆரோக்கியம் பெருகும். வியாபாரிகளுக்கு தொழில் விருத்தி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும்.

**கும்பம்:-** பயணங்கள் மற்றும் செயல்பாடுகளில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழி இல்லாத வகையில் வேதனைகளும் ஏற்படும். குழந்தைகளுக்கு சிறு உடல் உபாதைகள் ஏற்படலாம்.

மீனம் - வழக்கு வியாஜ்ஜியங்கள் தள்ளிப் போடுவது நல்லது. உங்கள் பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது நல்லது. தாயின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை.

# தூய்மைப் பணியாளர்கள் கைது

**சென்னை, ஜன. 03-**

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய தூய்மைப் பணியாளர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், மாநகராட்சி தூய்மைப் பணிகளை தனியார் மயமாக்குவதை கைவிட வேண்டும் உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, பல்வேறு கட்ட தொடர் போராட்டங்களில் தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்ணா அறிவாலயம், கலைஞர் நினைவகம், ரிப்பன் மாளிகை என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் போராட்டம் நடத்தி வரும் அவர்கள் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் வீட்டை முற்றுகையிட்டு நேற்று (ஜன. 2) போராட்டம் நடத்தினர். இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்களை காவல்துறையினர் கைது செய்து அழைத்துச் சென்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# தைவான் விரைவில் சீனாவுடன் இணையும்: அதிபர் ஜின்பிங் உறுதி

**பீஜிங், ஜன. 03-**

தைவானை தனது நாட்டின் தன்னாட்சி பிராந்தியமாகவே சீனா கருதுகிறது. தற்போது அதனை மீண்டும் சீனாவுடன் இணைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எனவே தைவான் விரைவில் சீனாவுடன் இணைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என தெரிவித்தார்.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தைவான் 1949-ல் தனி நாடாகப் பிரிந்தது. ஆனால் தைவானை இன்னும் தனது நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதி வருகிறது. எனவே அதனை மீண்டும் தன்னுடன் இணைப்பதற்காக சீனா போர்ப்பயிற்சிகளை நடத்தி வருகிறது. இதனால் அப்பகுதியில் சீனா பதற்றத்தைத் தூண்டுகின்றது.

தைவானுடன் வேறு எந்த நாடுகளும் தூதரக உறவு வைத்துக் கொள்ளக்கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், தைவான் எல்லைக்குள் போர்க்கப்பல் மற்றும் விமானங்களை அனுப்பி பதற்றத்தையும் தூண்டுகிறது. கடந்த வாரம் சீனா தைவான் எல்லையைச் சுற்றிலும் கூட்டு ராணுவ பயிற்சியை நடத்தியது.

இந்நிலையில், புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு சீன அதிபர் ஜி ஜின்பிங் நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: தைவானை தனது நாட்டின் தன்னாட்சி பிராந்தியமாகவே சீனா கருதுகிறது. தற்போது அதனை மீண்டும் சீனாவுடன் இணைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எனவே தைவான் விரைவில் சீனாவுடன் இணைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என தெரிவித்தார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# புத்தாண்டு செய்தி வெளியிட்ட நித்யானந்தா

**கைலாசா, ஜன. 03-**

நித்யானந்தா புத்தாண்டு செய்தி வெளியிட்டுள்ளார்.

திருவண்ணாமலையில் பிறந்த நித்யானந்தா, கர்நாடகாவில் ஆன்மிக சொற்பொழிவு நடத்தி பிரபலமானார். இவருடைய சொற்பொழிவை பார்த்து வெளிநாட்டினர் பலரும் அவரை குருவாக ஏற்றுக்கொண்டனர். ஆன்மிகத்தால் எந்த அளவுக்கு நித்யானந்தா பிரபலம் அடைந்தாரோ, அதைவிட பாலியல் புகார்களால் மேலும் பிரபலம் அடைந்தார்.

போலீசாரால் தேடப்படும் நபரான நித்யானந்தா இந்தியாவில் இருந்து வெளியேறி கைலாசா என்ற தீவையே உருவாக்கி சீடர்களுடன் வசித்து வருகிறார். இதற்கிடையே அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டதாக செய்தி பரவியது. அதை அவருடைய சீடர்கள் மறுத்தனர். பிறகு, பல ஆண்டுகளாக அவர் டயாலிசிஸ் சிகிச்சையில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியானது.

இருந்தாலும், அவ்வப்போது நித்யானந்தா தனது வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிட்டு வருகிறார். தற்போது, தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் புத்தாண்டு செய்தி ஒன்றையும் நித்யானந்தா வெளியிட்டுள்ளார். அதில், "இந்த 2026-ம் ஆண்டில் நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்: சாட்சி பாவம். அனைத்தையும் சாட்சியாகப் பார்க்கத் தொடங்கினால், இந்தப் புத்தாண்டு உங்களுக்கு ஒரு புதிய பிறவியாக அமையும்" என்று தெரிவித்துள்ளார். இறுதியாக, "பகவான் ஸ்ரீ நித்யானந்த பரமசிவம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வங்கதேசத்தில் மேலும் ஒரு இந்து மீது தீ வைத்த கும்பல்

**டாக்கா, ஜன. 03-**

வங்கதேசத்தில் தேர்தல் தேதி அறிவிப்பு வெளியானதில் இருந்து வன்முறைகள் தீவிரமடைந்துள்ளன. மாணவர் போராட்டத்தை நடத்திய இந்திய எதிர்ப்பாளர் ஓஸ்மான் ஹாதி மற்றும் இந்து இளைஞர் தீபு சந்திர தாஸ் ஆகியோர் அடித்துக் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, ராஜ்பாரி மாவட்டத்தைச் சேர்ந்தஅம்ரித் மண்டல் (29), என்ற இந்து இளைஞரை, அப்பகுதியைச் சேர்ந்த கும்பல் கடுமையாக தாக்கியது. இதில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனை செல்லும் வழியில் உயிரிழந்தார். ஆடை தொழிற்சாலை ஒன்றில் பிஜேந்திர பிஸ்வாஸ் (42) என்ற இந்து தொழிலாளி சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், ஷரியத்பூர் மாவட்டத்தில் மேலும் ஒரு இந்து ஒரு கும்பலால் கொடூரமாக தாக்கப்பட்டு, தீ வைத்து எரிக்கப்பட்டார். இதில் படுகாயம் அடைந்த அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர் 50 வயதான கோகோன் தாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, தாக்குதல் நடத்திய ஒரு குழு அவரை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியது விசாரணையில் தெரிய வந்தது. கடந்த 15 நாளில் வங்கதேசத்தில் இந்துக்கள் மீது நடத்தப்பட்ட 4-வது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், ஆங்கில புத்தாண்டையொட்டி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.எச்.பாண்டியன் ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில் அமைச்சர் சேகர்பாபு, சென்னை மேயர் பிரியா உள்ளனர்.

# வைகோவுக்கு வயது 28-ஆ 82 வயதா? முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆச்சரியம்

**திருச்சி, ஜன. 03-**

ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவுக்கு இப்போது 82 வயதா? அல்லது 28 வயதா என்று எனக்கு சந்தேகம் வருகிறது என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறினார்.

திருச்சியில் இருந்து மதுரைக்கு வைகோ மேற்கொள்ளும் சமத்துவ நடைப்பயணத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்து உரையாற்றினார். விழாவில் பேசிய வைகோ, திராவிட இயக்கத்தின் முத்திரையாகப் பதிந்திருப்பவர் முதல்வர் ஸ்டாலின், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றியை பெறப்போகிறார் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்.

சாதி, மதத்தின் பெயரால் இங்கு கலவரம் உருவாக்க தில்லி ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள் துடிக்கிறார்கள். சங்க காலத்தில் சாதிகள் கிடையாது. சாதிகள் அற்ற தமிழ் சமுதாயமாகவே இருந்தது. ஆனால் தற்போது மதத்தின் பெயரால் இங்கு மக்களுக்கு இடையே பிரிவினையை தூண்டப் பார்க்கிறார்கள். ஏகாதிபத்தியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் நடக்கும் சண்டைதான் சட்டப்பேரவைத் தேர்தல் என்று வைகோ கூறினார்.

தொடர்ந்து முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசுகையில், ம.தி.மு.க. தலைவர் வைகோவின் நெஞ்சுரம், வேகத்தைப் பார்க்கும் போது அவருக்கு 82 வயதா அல்லது 28 வயதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவரது காலடி படாத இடமே இல்லை எனும் அளவுக்கு மக்கள் பிரச்சனைகளுக்காக நடைப்பயணம் செய்தவர் வைகோ. திராவிட பல்கலைக்கழகத்தில் படித்தவர் வைகோ. அதே பல்கலையில்தான் நானும் பயின்றேன். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, பெண்களுக்கும் கல்வி உள்பட உரிமைகள் கிடைக்க போராடியவர் பெரியார். கருணாநிதியுடன் அருகில் இருந்து பாடங்களைக் கற்றவர் வைகோ. வைகோவின் சமத்துவ நடைபயணம் வெற்றி பெற வாழ்த்துகள். முதுமையை முற்றிலும் தூக்கியெறிந்துவிட்டு நடைப்பயணம் மேற்கொள்கிறார் வைகோ என்று முதல்வர் கூறினார்.

# மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறைந்தது

**மேட்டூர், ஜன. 03-**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வெள்ளிக்கிழமை காலை வினாடிக்கு 384 கனஅடியிலிருந்து 164 கனஅடியாக குறைந்தது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு 11,000 கனஅடி வீதமும், கிழக்கு - மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 400 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் நீரின் அளவைவிட பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 104.04 அடியிலிருந்து 103.30 அடியாக சரிந்துள்ளது. நீர் இருப்பு 69.18 டி.எம்.சி.யாக உள்ளது.

### எல்லை தாண்டி மீன்பிடித்ததாக

# புதுச்சேரி, காரைக்கால் மீனவர்கள் 11 பேர் கைது

**கொழும்பு, ஜன. 03-**

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட புதுச்சேரி மாநிலம் காரைக்காலை சேர்ந்த மீனவர்கள் 11 பேரை கடற்படை முகாமிற்கு இலங்கை கடற்படை அதிகாரிகள் அழைத்து சென்றனர்.

தமிழக-புதுச்சேரி மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு செல்லும்போது எல்லை தாண்டி சென்றதாக கூறி இலங்கை கடற்படை தொடர்ந்து கைது நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கடந்த 3 நாட்களுக்கு முன்பு கடலுக்கு மின்பிடிக்க சென்ற ராமேஸ்வரம் மீனவர்களை எல்லை தாண்டி சென்றதாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இந்த நிலையில் புதுச்சேரி மாநிலம் காரைக்காலை சேர்ந்த 11 மீனவர்கள் காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர். அவர்கள் இலங்கை யாழ்ப்பாணம் காங்கேசன் துறைமுகம் வடமேற்கு கடற்பரப்பில் நேற்று காலை மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்களது படகை பறிமுதல் செய்து 11 மீனவர்களையும் கைது செய்தனர். எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி அவர்கள் இந்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைது செய்த 11 மீனவர்களையும் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்கள் விசாரணை நடத்தியபோது கைது செய்யப்பட்ட மீனவர்கள் புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்ட மீனவர்கள் என தெரியவந்தது. விசாரணை முடிந்து மீனவர்கள் 11 பேரும் யாழ்ப்பாணம் மீன்வளத் துறை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாக இலங்கை கடற்படை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தமிழக-புதுச்சேரி மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்து வரும் நடவடிக்கைக்கு மத்திய, மாநில அரசுகள் விரைந்து தீர்வு காண வேண்டும் என்று மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

# குற்றால அருவிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு

### சுற்றுலாப்பயணிகள் குளிக்கத் தடை



**தென்காசி, ஜன. 03-**

குற்றாலம் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து வியாழக்கிழமை நள்ளிரவு முதல் சுற்றுலாப்பயணிகள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் குற்றாலம் பகுதியில் வியாழக்கிழமை இரவு முதல் பெய்த கனமழையின் காரணமாக குற்றாலம் பேரருவியில் நள்ளிரவு முதல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பாதுகாப்புவளைவைத்தாண்டி முதல் நடைபாலம் வரையிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. அதேபோன்று ஐந்தருவி, புலியருவி மற்றும் சிற்றருவியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனையடுத்து அனைத்து அருவிகளிலும் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தற்காலிக தடை விதிக்கப்பட்டது.

பழைய குற்றாலம் அருவியில் பராமரிப்பு பணிகள் காரணமாக சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கும்,செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக கடனாநதி அணைப் பகுதியில் 23.மி.மீ மழைப்பொழிந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டம், மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் கன மழை பெய்து வருவதால் களக்காடு அருகே உள்ள திருக்குறுங்குடி மலை நம்பிகோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகமாக இருப்பதால் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் கோயிலுக்கு செல்லவும், குளிக்கவும் வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். மேலும் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் கன மழை காரணமாக, மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மணிமுத்தாறு அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க வனத்துறை தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

### வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட

# 300 பேருக்கு முதல்கட்டமாக வருகிற பிப்ரவரி மாதம் வீடுகள் ஒப்படைப்பு

### கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

**வயநாடு, ஜன. 03-**

வயநாடு நிலச்சரிவால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களில் 300 பேருக்கு முதல்கட்டமாக அடுத்த மாதம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் ஒப்படைக்கப்படவுள்ளதாக கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

வயநாட்டில் உள்ள முண்டக்கை, சூரல்மலை பகுதிகளில் கடந்த 2024 ஜூலை 30-ஆம் தேதி பயங்கர நிலச்சரிவுகள் ஏற்பட்டதில், ஏராளமான வீடுகள் புதைந்து 250-க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த பேரிடரில் பாதிக்கபட்டவர்களுக்கு மாநில அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் சார்பில் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போது முதல்கட்டமாக கட்டி முடிக்கப்பட்ட 300 வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவுள்ளதாக கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக செய்தியாளர்களுடன் பேசிய பினராயி விஜயன் தெரிவித்ததாவது: "கல்பேட்டா புறவழிச்சாலைக்கு அருகில் உள்ள எல்ஸ்டன் எஸ்டேட் நிலத்தில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, முதல்கட்டமாக அனைத்து வசதிகளுடன் அடங்கிய 300 வீடுகளை பிப்ரவரி மாதத்துக்குள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்குவதே எங்கள் இலக்கு.

பாதுகாப்பு, தரம் மற்றும் நீண்டகால நிலைத்தன்மை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தி, இந்தத் திட்டம் அதிவேகமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த குடியிருப்புப் பகுதியில் மொத்தம் 410 வீடுகள் கட்டடப்பட்டு வருகின்றது.

இந்த குடியிருப்புப் பகுதியில் நிலத்தடி மின்சார வலையமைப்பு, பெரிய கொள்ளளவு கொண்ட தொட்டியுடன் கூடிய குடிநீர் வழங்கல், உள் சாலைகள், ஒரு பொது சுகாதார மையம், அங்கன்வாடி, சமுதாயக் கூடம், சந்தை, விளையாட்டு திடல்கள் மற்றும் கழிவு மேலாண்மை வசதிகள் ஆகியவை அடங்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் சூரிய மின்சக்தி அமைப்பு மற்றும் அதற்கெனத் தனி குடிநீர் சேமிப்புத் தொட்டியும் இருக்கும். கட்டுமானத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் தரத்தை உறுதி செய்து வருகிறோம். ஆய்வுகளுக்குப் பின்னரே பணிகள் முன்னோக்கிச் செல்கின்றன. கட்டுமானக் குறைபாடுகளுக்கு எதிராக ஒப்பந்தக்காரர்கள் 5 ஆண்டுகள் பாதுகாப்பு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. சுமார் 1,600 தொழிலாளர்கள் இரவு பகலாகப் பணியாற்றி வருகின்றனர். பல வீடுகளுக்கு மேற்கூரை அமைத்தல், சாலை அமைத்தல் மற்றும் குடிநீர்த் தொட்டி கட்டுதல் உள்ளிட்ட பல முக்கியப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துவிட்டன." எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், கேரள அரசின் வீட்டுவசதித் திட்டமான லைஃப் மிஷன் பற்றி பேசிய முதல்வர், "லைஃப் மிஷன் மூலம் இதுவரை 4,76,076 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி மாதத்தில் இந்த எண்ணிக்கை ஐந்து லட்சத்தை எட்டும். தற்போது 1,24,471 வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன." என்றார்.

# ம.பி.யில் கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்த மேலும் 4 பேர் உயிரிழப்பு

### பலி எண்ணிக்கை 11 ஆக உயர்வு

**இந்தூர், ஜன. 03-**

மத்திய பிரதேச மாநிலம் இந்தூர் தூய்மையான நகரங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இங்குள்ள பாகிரத்புரா பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள் கடந்த 24-ந் தேதி முதல் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். கழிவுநீர் கலந்த மாசுபட்ட குடிநீரை குடித்தது தான் இதற்கு காரணம் என்பது தெரிய வந்துள்ளது. இந்த சம்பவத்தில் முதல்கட்டமாக 7 பேர் உயிரிழந்தனர். 40-க்கும் மேற்பட்டோர் கடுமையாக பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்த மேலும் 4 பேர் தற்போது பலியாகி உள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக மத்திய பிரதேச முதல்வர் மோகன் யாதவ், 3 நகராட்சி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். ஒரு மண்டல அதிகாரி மற்றும் ஒரு உதவி பொறியாளர் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் குறித்து விசாரிக்க 3 பேர் கொண்ட விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று முதல்வர் மோகன் யாதவ் அறிவித்தார்.

### நீலகிரியில் கனமழை:

# உதகை மலை ரயில் சேவை ரத்து

**நீலகிரி, ஜன. 03-**

மேட்டுப்பாளையத்தில் இருந்து நேற்று காலை உதகைக்கு புறப்பட்ட ரயில், மண் சரிவு காரணமாக பாதியிலேயே ரத்து செய்யப்பட்டு திரும்பியது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென் மாவட்டங்களில் இரவு முழுவதும் பரவலாக மழை பெய்தது.

குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் பெய்த கனமழையால் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அடர்லி மற்றும் ஷில்குரோவ் ரயில் நிலையங்களுக்கு இடையேயான மலை ரயில் பாதையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மேட்டுப்பாளையத்தில் இருந்து நேற்று காலை உதகைக்கு புறப்பட்ட ரயில், மண் சரிவு காரணமாக பாதியிலேயே ரத்து செய்யப்பட்டு திரும்பியது. இதனால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்தனர். தண்டவாளத்தில் விழுந்துள்ள மணல் மற்றும் கற்களை அப்புறப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### சென்னையில் ராம்நாத் கோயங்கா

# சாகித்திய சம்மான் விருதுகளை வழங்கினார் துணை ஜனாதிபதி




**சென்னை, ஜன. 03-**

ராம்நாத் கோயங்கா சாகித்திய சம்மான் விருதுகளை குடியரசுத் துணைத் தலைவர் வழங்கி கவுரவித்தார்.

'ராம்நாத் கோயங்கா சாகித்திய சம்மான்' விருதுகள் வழங்கும் விழா நேற்று சென்னையில் நடைபெற்றது. விருதுகள் வழங்கும் விழாவில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார்.

கன்னட எழுத்தாளர் சந்திரசேகர கம்பாராவுக்கு ராம்நாத் கோயங்கா சாகித்திய சம்மான் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. புனைவுக்கான பிரிவில் 'டேல்ஸ் ஃபிரம் தி டான்-லிட் மௌண்ட்டெயின்ஸ்' என்ற நூலை எழுதிய சுபி தாபாவுக்கு வழங்கப்பட்டது. அ-புனைவுக்கான பிரிவில் 'ஃபாலன் சிட்டி - எ டபுள் மர்டர், பொலிடிகல் இன்சானிடி அன்ட் தில்லி டெசென்ட்' என்ற நூலை எழுதிய சுதீப் சக்ரவர்த்திக்கு விருது வழங்கப்பட்டது. சிறந்த அறிமுக எழுத்தாளர் விருது நேகா தீட்சித் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பங்கேற்று, விருது பெறத் தேர்வான இலக்கிய படைப்பாளிகளுக்கு விருது வழங்கி கவுரவித்தார். சுதந்திரப் போராட்ட வீரரும், பத்திரிகைத் துறை முன்னோடியுமான மறைந்த ராம்நாத் கோயங்காவின் நினைவாக சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கான விருதுகள் கடந்த 2023-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழகம் வரும் அமித்ஷாவை சந்திக்க இ.பி.எஸ். திட்டம்



**சென்னை, ஜன. 03-**

வருகிற 4-ம் தேதி தமிழகம் வரும் அமித்ஷாவை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வரும் 5-ந்தேதி திருச்சியில் வைத்து இருவரின் சந்திப்பு நடக்க உள்ளதாக தெரிய வந்துள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க. சட்டசபை தேர்தல் பிரசாரத்தை தித்திக்கும் பொங்கலுடன் தொடங்க இருக்கிறது. தொடர்ந்து 2 மாதங்களுக்கு தீவிர பிரசாரத்தை முன்னெடுக்கவும் பா.ஜ.க. வியூகங்கள் அமைத்து வருகிறது. அந்த வகையில் வருகிற 5-ந்தேதி ஸ்ரீரங்கத்தில் 'மோடி பொங்கல்' நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு உள்ளது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்க உள்ளார். கூட்டணி கட்சி தலைவர்களும் பங்கேற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

ஜனவரி 4-ந்தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதுக்கோட்டைக்கு வர உள்ளார். அன்றைய தினம் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நடத்தி வரும் 'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' என்ற யாத்திரையின் நிறைவு விழா நடக்கிறது. இந்த விழாவில் அவர் பங்கேற்றுப் பேசுகிறார்.

இதில், சுமார் 2 லட்சம் பேர் பங்கேற்க இருக்கின்றனர். இதையடுத்து, திருச்சியில் அமித்ஷா தங்குகிறார். பின்னர், மறுநாள் (5-ம் தேதி) திருச்சி ஸ்ரீரங்கம் கோவிலுக்கு செல்கிறார். இதையடுத்து காலை 11 மணி அளவில் மன்னார்புரம் ராணுவத் திடலில் ஏறக்குறைய 2 ஆயிரம் பெண்கள் பங்கேற்கும் "மோடி பொங்கல்" விழாவில் அமித்ஷா கலந்து கொள்கிறார்.

அமித்ஷா கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல், பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர்கள், மேலிட பொறுப்பாளர்களும் பங்கேற்கிறார்கள். இந்நிலையில் 4-ந்தேதி தமிழகம் வரும் அமித்ஷாவை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வரும் 5-ந்தேதி திருச்சியில் வைத்து இருவரின் சந்திப்பு நடக்க உள்ளதாக தெரிய வந்துள்ளது. அமித்ஷாவுடனான சந்திப்பில் தொகுதி பங்கீடு, கூட்டணி விரிவாக்கம், தேர்தல் வியூகம், ஓ.பி.எஸ்., டி.டி.வி.தினகரன் இணைப்பு, குறித்து ஆலோசிக்க வாய்ப்புள்ளது. வரும் 5-ந்தேதி திருச்சியில் நடக்கும் பொங்கல் விழாவிலும் எடப்பாடி பழனிசாமி பங்கேற்க வாய்ப்பு உள்ளது.

### கதை திருடப்பட்டதாக புகார்:

# 'பராசக்தி' படத்துக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுப்பு

**சென்னை, ஜன. 03-**

நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா நடித்துள்ள 'பராசக்தி' படத்தை வெளியிட தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்து விட்டது.

நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவிமோகன், அதர்வா நடித்து, சுதா கொங்கரா இயக்கி, ஆகாஷ் பாஸ்கரனின் டான் பிச்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள 'பராசக்தி' திரைப்படம் ஜனவரி 10-ம் தேதி திரைக்கு வர உள்ளது. இந்நிலையில், தனது செம்மொழி என்ற கதையை திருடி தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும் என இணை இயக்குனர் ராஜேந்திரன் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, '1965-ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தை மையமாக வைத்து, செம்மொழி என்ற பெயரில் கதையாக எழுதி, 2010-ம் ஆண்டு தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டது. அந்தக் கதையை பயன்படுத்தி பராசக்தி திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. படத்தின் கதாசிரியர் என பட இயக்குநர் சுதா கொங்குரா பெயரை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும். படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும்' என்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் புருஷோத்தமன் வாதிட்டார்.

பட இயக்குனர் சுதா கொங்கரா மற்றும் பட தயாரிப்பு நிறுவனம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் பி.எஸ்.ராமன், அரவிந்த் பாண்டியன் மற்றும் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் ஆகியோர், 'பராசக்தி படத்தில் கதையை 2020-ஆம் ஆண்டு இயக்குநர் பதிவு செய்திருக்கிறார். மனுதாரரின் செம்மொழி பட கதைக்கும், பராசக்தி பட கதைக்கும் திரைக்கதைக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை. படத்தின் கதையை திருடி இருப்பதாக கூறுவதற்கு எந்த ஆதாரங்களும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. பெரும் பொருட் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள படத்துக்கு தடை விதித்தால் பெருத்த இழப்பு ஏற்படும்' என வாதிட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, பராசக்தி படம் தயாரிப்பு குறித்து 2024-ஆம் ஆண்டு தகவல் தெரிந்தும் 2025 டிசம்பர் மாதம் தான் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என கூறி படத்தை வெளியிட தடை விதிக்க முடியாது என அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். பராசக்தி படத்தின் கதையையும் செம்மொழி கதையையும் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்தும், தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் சங்கம் அறிக்கையை இது வரை தாக்கல் செய்ய வில்லை என்பதால் அறிக்கையை மூடி முத்திரையிடப்பட்ட உறையில் தாக்கல் செய்ய வேண்டும் என்று தென்னிந்திய திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்திற்கு நீதிபதி உத்தரவிட்டு, பிரதான வழக்கின் விசாரணையை ஜனவரி 28-ஆம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



**நா**ட்டின் வருங்காலத் தலைமுறையைச் செதுக்கும் சிற்பிகளான ஆசிரியர் பெருமக்களை வாட்டி வதைக்காமல், ஊதியப் பாகுபாட்டைக் களைந்து, அனைத்து இடைநிலை ஆசிரியப் பெருமக்களுக்கும் சம ஊதியம் வழங்க உடனடியாக அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டும்.

**- சீமான்**



**வ**ருடாவருடம் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் நிலையில், இத்தனை நாட்கள் பரிசுத் தொகுப்புக்கான கரும்பையும், பச்சரிசியையும், சர்க்கரையையும் கொள்முதல் செய்யாதது ஏன்? உடனடியாகக் கரும்பையும், மஞ்சளையும், வெல்லத்தையும் கொள்முதல் செய்து, ரூ.5,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசை வழங்க வேண்டும்.

**- நயினார்**



**எ**னது நடை பயணத்தில் மக்களை சந்திக்கும் போதெல்லாம் தி.மு.க.வின் பொற்கால ஆட்சி தொடர வேண்டும் என்று கோரிக்கை வைப்பேன். வரும் தேர்தலில் தி.மு.க. அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு கொடுத்து வெற்றிபெறச் செய்யுங்கள் என்று தி.மு.க.வின் திட்டங்களை எடுத்து சொல்லுவேன்.

**- வைகோ**



**த**மிழ்நாடு காங்கிரஸில் நடைபெறும் விசயங்கள் மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளன. ஒரு சிலரின் சுயநலத்துக்காக தமிழ்நாடு காங்கிரஸ் கொஞ்சம் கொஞ்சமாக அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

**- ஜோதிமணி**



சென்னை மாநகராட்சி முதல்மண்டலமான திருவொற்றியூர் 7வது வட்டத்தில் பேருந்து நிறுத்தத்தில் அதிமுக ஐ.டி.விங் காஞ்சிபுரம்மண்டல தலைவரும், கவுன்சிலருமான கார்த்திக் ரூ.13 லட்சம் செலவில் பயணிகள் நிழற்குடை அமைத்து கொடுத்துள்ளார்.

# சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயன் சுவாமி திருக்கோயில் தேரோட்டம்: அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, த.மனோ தங்கராஜ் வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்





**சென்னை,ஜன.03**

அமைச்சர்கள்.பி.கே.சேகர்பாபு. த. மனோ தங்கராஜ் ஆகியோர் (02.01.2026) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயன் சுவாமி திருக்கோயில் தேரோட்ட விழாவில் கலந்து கொண்டு, வடம் பிடித்து இழுத்து தொடங்கி தேரோட்டத்தினை வைத்தனர். அதனைத் தொடர்ந்து திருக்கோயிலுக்கு மீண்டும் குடமுழுக்கு நடத்திடும் வகையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயன் சுவாமி திருக்கோயிலானது 1,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயிலின் மார்கழி திருவிழா டிசம்பர் 25 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக இன்று விநாயகர், சுவாமி, அம்மன் திருத்தேர்களின் தேரோட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. பி.கே.சேகர்பாபு மற்றும் திரு. த. மனோ தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தேரோட்டத்தினை வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, எல்லா வளமும் நலமும் தருகின்ற சுசீந்திரம்அருள்மிகு தாணுமலையான் சுவாமி திருக்கோயிலில் மார்கழி மாத தேரோட்டத்தை இன்றைக்கு நானும், இந்த மாவட்டத்தின் அமைச்சர் மனோதங்கராஜ் முன்னாள் அமைச்சர். சுரேஷ்ராஜன் பொதுமக்களோடு இணைந்து தொடங்கி வைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்த அளவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சுமார் 300 திருக்கோயில்கள் திருப்பணிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, இதுவரையில் 127 திருக்கோயில்கள் குடமுழுக்கு காணப்பட்டிருக்கின்றது. இந்த மாவட்டத்தில் 400 ஆண்டுகளுக்க பிறகு திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில், மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயில், திருவிதாங்கோடு அருள்மிகு மகாதேவர் திருக்கோயில் போன்றவை இந்த ஆட்சியில் தான் குடமுழுக்கு காணப்பட்டது. இப்படி வரலாற்று சிறப்புமிக்க கன்னியாகுமரியில் அமைந்திருக்கின்ற திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு கண்ட ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 திருக்கோயில்களுக்குகு சொந்தமான 20 திருத்தேர்களுக்கு 1.85 கோடி ரூபாய் செலவில் திருத்தேர் பாதுகாப்பு கொட்டகைகள் அமைத்து தரப்பட்டுள்ளது. அதேபோல் 6 திருக்கோயில்களுக்கு சொந்தமான 8 திருக்குளங்கள் 2.19 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயிலுக்கு சொந்தமான தெப்பக்குளம் 34.50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டதில் எதிர்பாராதவிதமாக தடுப்பு சரிவு ஏற்பட்டதால் அந்தப் பணிகளுக்கு மறுமதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையர் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஓரிரு நாளில் ஆணையர் அனுமதி வழங்கப்பட்டு இந்த மாத இறுதிக்குள் அந்தப் பணியினை தொடங்குவோம். பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த நண்பர்கள் ஏப்ரல் மாதம் நடைபெறுகின்ற திருவிழாவிற்குள் திருக்குளத்தை செப்பனிட்டு தெப்பத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைத்தார்கள். போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு இணை ஆணையாளருக்கு தற்போது உத்தரவிட்டிருக்கின்றோம். இந்த ஆட்சி பொறுப்பேற்ற போது கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நிதிக்காக 3 கோடி ரூபாய் தான் அரசு மானியமாக வழங்கப்பட்டது. திருக்கோயில்களின் பணியாளர்கள் ஊதியம், திருக்கோயில்களில் நடைபெறுகின்ற உற்சவங்கள், திருவிழா கால செலவினங்களை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று படிப்படியாக உயர்த்தி தற்போது ஆண்டிற்கு 18 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கி வருகின்றோம். அந்த வகையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் 51 கோடி ரூபாய் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் வரும் 490 திருக்கோயில்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இன்னும் கூடுதல் தேவைகள் இருப்பின், அவற்றையும் கண்டறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அரசு மானியத்தை பெற்று பக்தர்களின் வசதிக்குண்டான அனைத்து பணிகளையும் மேற்கொள்வோம். இந்த திருக்கோயிலில் 2.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.இறை அன்பர்களின் வசதிக்காக எண்ணற்ற நலத்திட்டங்களை இந்து சமய அறநிலையத்துறை செய்து வருகிறது. பொற்கால ஆட்சியின் இந்த இறைப்பணிகள் தொடரும். இறைவனிடம் வழிபடுகின்ற நேரத்தில் பிரிவினைகள் வேண்டாம். இறைவழிபாட்டிலே தகாத கோஷங்கள் எழுப்ப வேண்டாம். இறைவழிபாட்டை அமைதியான முறையில் கடைபிடியுங்கள் என்ற வேண்டுகோளை தேவையற்ற கோஷங்களை எழுப்பும் நண்பர்களுக்கு துறை சார்ந்த அமைச்சர் என்ற முறையில் பணிவுடன் முன்வைக்கின்றேன்.

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு மாநில வல்லுநர் குழு, தொல்லியல் குழுவின் அனுமதி பெற்ற பிறகு பணிகளை தொடங்க வேண்டும். ஒவ்வொரு திருக்கோயிலும் குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவடைவதற்குள்ளாக குடமுழுக்கு நடத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆட்சியில் தான் 3,956 திருக்கோயில்களுக்கு இன்று வரை குடமுழுக்கு நடந்திருக்கின்றது. 4000 வது குடமுழுக்காக பிப்ரவரி 8 அன்று சென்னை, வியாசர்பாடி இரவீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற உள்ளது. சாலை மட்டத்திலிருந்து தாழ்வாக உள்ள 25 திருக்கோயில்கள் லிப்டிங் முறையில உயர்த்தப்பட்டு வருகின்றது.

கன்னியாகுமரிக்கு வருகின்றபோதெல்லாம் இரணியல் அரண்மனையை பார்வையிட்டு சென்று இருக்கின்றேன். அந்த அரண்மையை பொறுத்தளவில் பழமை மாறாமல் கட்டப்பட வேண்டிய சூழல் இருக்கின்றது. ஏதோ எடுத்தோம் கவிழ்த்தோம் என்று இல்லாமல் முதலிலேயே 3 கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் பழமை மாறாமல் கட்டுகின்ற பணிகள் என்பதால் தற்போது 8 கோடி ரூபாயை நெருங்கி இருக்கின்றது. எவ்வளவு விரைவாக அதனை முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களை போலவே எனக்கும் இருக்கின்றது. ஆகவே அந்த பணிகளை விரைந்து முடிப்பதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

கன்னியாகுமரி, அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயிலை பொறுத்தளவில் பெருந்திட்ட வளாக பணிகளின் (மாஸ்டர் பிளான்) கீழ், 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜகோபுரம் மற்றும் ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விஜய் வசந்த், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் என். சுரேஷ்ராஜன், கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆர். அழகுமீனா, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் பி. கவிதா பிரியதர்சினி, ஏ. ஜான்சிராணி, உதவி ஆணையர் கே. தங்கம் உள்ளனர்.

# போரூரில் பாமக ஆட்டோ தொழிற்சங்க பெயர் பலகை திறப்பு



**சென்னை ஜன 03-**

சென்னைபோரூர் சேக்மான்யம் ஆற்காடு சாலை சந்திப்பில் மாவட்ட துணை செயலாளர் இரா வெங்கடேசன் ஏற்பாட்டில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் சேர்மன் இரா வேலாயுதம் தலைமையில்ஒன்றிய துணை பெருந்தலைவர் ஜெ.ஞானபிரகாசம் மாநில செயற்குழு உறுப்பினர் வானகரம் ஊராட்சி மன்ற தலைவர் என்.விசினிவாசன். ஆகியோர் முன்னிலையில் பாட்டாளி தொழிற்சங்கம் தெய்வத்திரு.ஆறுமுகம் இராமன் நினைவு ஆட்டோ ஓட்டுனர் நலச்சங்கம் திறப்பு விழா நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் ஆலப்பாக்கம் து.சேகர் ,மாநில துணை தலைவர் ஆலப்பாக்கம் ஏஆர் டில்லிபாபு ,மாவட்ட தலைவர் செம்பரம்பாக்கம் இரமேஷ், சமூக ஊடகப் பேரவை மாநில செயலாளர் சண்முக பூபாலன், பகுதி துணை செயலாளர் அர்ஜுனன் போரூர் வட்ட செயலாளர் ஆர்.ஜே பிரதீப்,வட்ட தலைவர் மணிவண்ணன் பாட்டாளி தொழிற்சங்க மாநில துணை தலைவர் இரங்கநாதன்,ஆட்டோ ஓனர்கள் வினோத் ரமேஷ் முத்துவேல் ரமேஷ் முருகன் கோபால் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# நந்தம்பாக்கம் பகுதியில் மாடி வழியாக தண்ணீர் குழாய்களை உடைத்து திருடிய இருவர் கைது

**சென்னை ஜன 03-**

சென்னை, நந்தம்பாக்கம், டிஃபன்ஸ் ஆபிசர்ஸ் காலனியில் வசித்து வரும் பாலதண்டாயுதபாணி,என்பவர் 28.ந் தேதி அன்று அதிகாலை வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, முதல் மாடியில் சத்தம் கேட்டு எழுந்து சென்று பார்த்தபோது, மாடியிலுள்ள கதவின் தாழ்ப்பாள் உடைக்கப்பட்டு யாரோ உள்ளே நுழைந்து, சமையலறையில் இருந்த மற்றும்சமையல் அறையில் பொருத்தப்பட்டிருந்த உலோகத்தாலான 2 குழாய்கள் திருடப்பட்டு, தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்ததாகவும், அத்துமீறி மாடி வழியாக வீட்டிற்குள் நுழைந்து, குழாய்களை உடைத்து திருடிய நபர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும்படியும், பாலதண்டாயுதபாணி என்பவர் நந்தம்பாக்கம் காவல் நிலைய குற்றப் பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

நந்தம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்தும், அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும் மேற்படி திருட்டில் ஈடுபட்ட எதிரிகள் 1.சந்தோஷ் (எ) பட்டர் சந்தோஷ், 2.வசந்த், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து, மேற்படி வீட்டில் திருடிய உலோகத்தாலான 2 குழாய்கள் மீட்கப்பட்டது.

விசாரணையில் ஏற்கனவே எதிரிகள் சந்தோஷ் மீது 2 குற்ற வழக்குகளும், வசந்த் மீது 1 குற்ற வழக்கும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# நீலாங்கரை பகுதியில் கோவில் உண்டியல் பூட்டை உடைத்து, பணத்தை திருடிய கொள்ளையன் கைது

**சென்னை ஜன 03-**

சென்னை, நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் பகுதியில் வசித்து வரும் மதி, என்பவர் ஈஞ்சம்பாக்கம், பொன்னியம்மன் கோவில் தெருவில் உள்ள ஶ்ரீதேவி தண்டு துலுக்கானத்தம்மன் கோவிலில் நிர்வாகியாக உள்ளதாகவும், கடந்த 16.12.2025 அன்று இரவு, மேற்படி கோவிலை பூட்டிவிட்டு, மறுநாள் (17.12.2025) காலை கோவிலுக்கு வந்து பார்த்த போது, கோவிலில் உள்ள உண்டியலின் பூட்டு உடைக்கப்பட்டு, அதிலிருந்த பணம் திருடு போனது தெரியவந்ததாகவும், கோவில் நிர்வாகி மதி என்பவர் நீலாங்கரை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

நீலாங்கரை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ஆனஸ்ட்ராஜ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து பணம் ரூ.5 ஆயிரந் மீட்கப்பட்டு, குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி ஆனஸ்ட்ராஜ் குரோம்பேட்டை காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் இவர் மீது ஏற்கனவே 3 கொலைமுயற்சி, 11 திருட்டு, வழிப்பறி உட்பட சுமார் 20 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஆனஸ்ட்ராஜ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# திருவொற்றியூரில் போதைப்பொருட்கள் வைத்திருந்த 3 பேர் கைது

**சென்னை ஜன 03-**

சென்னையில் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில்,

தனிப்படையினர் மற்றும் திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று முன்தினம் திருவொற்றியூர், இரயில் நிலையம் அருகில் கண்காணித்த போது, அங்கு மூவர் மெத்தம்பெட்டமைன் மற்றும் கஞ்சா ஆகிய போதைப் பொருட்களை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், திருவொற்றியூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்ட விரோதமாக போதைப்பொருட்கள் வைத்திருந்த எதிரிகள் 1.தர்ஷன், 2.பரத்குமார், 3.சுதாகர்,ஆகிய 3 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 4 கிராம் மெத்தம்பெட்டமைன், 100 கிராம் கஞ்சா, 3 செல்போன்கள் மற்றும் 1 எடை மெஷின் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி தர்ஷன் தனியார் கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வருவதும், பரத்குமார் இருசக்கர வாகன மெக்கானிக் வேலை செய்து வருவதும், சுதாகர் லாரி மெக்கானிக் வேலை செய்து வருவதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட 3 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்றொரு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**

# எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் அனுமதியின்றி வீட்டில் நாட்டு பட்டாசு பதுக்கியவர் கைது

**சென்னை ஜன 03-**

சென்னை, நெசப்பாக்கம், டாக்டர் கானு நகர், கண்ணதாசன் குறுக்கு தெருவில் கிருஷ்ணவேணி, வசித்து வருகிறார். கிருஷ்ணவேணியின் 9 வயது மூத்த மகன் கடந்த 28. ந் தேதி அன்று அதே தெருவில் வசித்து வரும் செல்வகுமார் என்பவரின் வீட்டின் பின்புறம் உள்ள அடையார் ஆற்றங்கரையில் விளையாடிக்கொண்டிருந்த போது, அங்கு கிடந்த சிறிய நாட்டு பட்டாசுகளை எடுத்து வெடித்தும், நாட்டு பட்டாசுகளை பிரித்து தீயிட்ட போது அவரது மகனுக்கு 2 கால்களில் காயம் ஏற்பட்டதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகவும், எனவே அனுமதியின்றி நாட்டு பட்டாசுகளை வைத்திருந்த செல்வகுமார் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி கிருஷ்ணவேணி R-10 எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் வெடி பொருள் சட்டம் ஆகிய சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

**விசாரணை**

எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து, நாட்டு பட்டாசுகளை வீட்டில் அனுமதியின்றி வைத்திருந்த செல்வகுமார், வ/40, நெசப்பாக்கம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 200 நாட்டு பட்டாசுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

இவர் விழுப்புரத்தில் இருந்து நாட்டு பட்டாசுகளை வாங்கி வந்து வீட்டில் பதுக்கி வைத்திருந்து விற்பனை செய்து வந்ததும், நமத்து போன சிறிய நாட்டு பட்டாசுகளை வீட்டில் பின்புறம் ஆற்றங்கரையோரம் வைத்திருந்ததும், விளையாட சென்ற மேற்படி சிறுவன் அந்த பட்டாசுகளை எடுத்து தீயிட்டபோது காயம் ஏற்பட்டது தெரியவந்தது.

# புழல் சிறையில் ஆம்ஸ்ட்ராங் கொலையாளிகளிடையே மோதல்: கண்காணிப்பாளர் விசாரணை

**சென்னை ஜன 03-**

சென்னை புழல் சிறையில் ஆம்ஸ்ட்ராங் கொலையாளிகளிடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் கண்காணிப்பாளர் விசாரணை நடத்தி வருகிறார். ஜாமினில் எடுப்பது தொடர்பாக பொன்னை பாலு, மணிவண்ணன் மற்றும் புதார் அப்பு இடையே மோதல் ஏற்பட்டது. சண்டையை விலக்கிவிட்ட உதவி சிறை அலுவலர் திருநாவுக்கரசு காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டுள்ளார். மோதலில் ஈடுபட்டவர்கள், பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்களிடம் சிறை கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ் விசாரணை நடத்தி வருகிறார்

# 2026 புத்தாண்டு தினத்தன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் 545 குழந்தைகள் பிறந்துள்ளன

**சென்னை ஜன 03-**

2026 புத்தாண்டு தினத்தன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் 545 குழந்தைகள் பிறந்துள்ளன. சென்னையில் மட்டும் 46 குழந்தைகள் பிறந்தன. தென்காசியில் 20 குழந்தைகள் பிறந்துள்ளன.நாடு முழுவதும் ஆங்கில புத்தாண்டு கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ஆண்டின் முதல் நாளில் பிறப்பவர்கள் ஆங்கில புத்தாண்டோடு தங்களது பிறந்தநாளையும் சேர்த்து கொண்டாடி மகிழ்வார்கள். அந்த வகையில் ஆங்கில புத்தாண்டு தினமான நேற்று தமிழ்நாடு முழுவதும் குழந்தைகள் பிறந்துள்ளன.

சென்னையில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளில் 46 குழந்தைகள் பிறந்தன. அதன்படி, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைகளில்ப் 15 பெண் குழந்தைகள் மற்றும் 6 ஆண் குழந்தைகள் என மொத்தம் 21 குழந்தைகள் பிறந்தன. இதில், 2 தாய்மார்களுக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறந்தன.இந்த குழந்தைகளை ஆஸ்பத்திரியின் உதவி மருத்துவ அதிகாரி டாக்டர் சித்ரா மற்றும் டாக்டர் சந்திரகலா உள்ளிட்ட மருத்துவர்கள் மகிழ்ச்சியுடன் கைகளை தட்டி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.மேலும், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைகளில் 7 குழந்தைகள் பிறந்தன. இதில் 4 பெண் குழந்தைகள், 3 ஆண் குழந்தை ஆகும். திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி ஆஸ்பத்திரியில் 6 குழந்தைகள் பிறந்தன. ராயபுரம் அரசு ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனைகளில் 12 குழந்தைகள் பிறந்தன. இதில் 5 ஆண் குழந்தைகள் மற்றும் 7 பெண் குழந்தைகள் ஆகும்.காஞ்சிபுரம் மாவட்டத்தில் புத்தாண்டு தினமான நேற்று அரசு மருத்துவமனைகளில் 4 ஆண் குழந்தைகள், 4 பெண் குழந்தைகள் என 8 குழந்தைகள் பிறந்துள்ளனர். செங்கல்பட்டு மாவட்டத்தில் அரசு ஆஸ்பத்திரிகளில் புத்தாண்டு தினமான நேற்று 9 ஆண் குழந்தைகள், 11 பெண் குழந்தைகள் என 20 குழந்தைகள் பிறந்துள்ளனர்.கோவை மாவட்டத்தில் 11 (ஆண்-5, பெண்-6), குழந்தைகளும், நீலகிரியில் 6 (ஆண்-3, பெண்-3), திருப்பூரில் 13 (ஆண் -5, பெண்-8), வேலூரில் 8 (ஆண்-6, பெண்-2), குழந்தைகளும், திருவண்ணாமலையில் 22 (ஆண்-12, பெண்-10) குழந்தைகளும், திருப்பத்தூரில் 12 (ஆண் – 4, பெண்-8) குழந்தைகளும், ராணிப்பேட்டையில் 6 (ஆண் 2, பெண் 4) குழந்தைகளும் பிறந்துள்ளன.குமரி மாவட்டத்தில் 6 (ஆண் 1, பெண் 5) குழந்தைகளும், ஈரோட்டில் 12 குழந்தைகளும், திண்டுக்கல்லில் 20 (ஆண்-6, பெண்-14) குழந்தைகளும், தேனியில் 13 (ஆண் 7, பெண் 6) குழந்தைகளும், கடலூரில் 13 (ஆண் 6, பெண் 7) குழந்தைகளும், கள்ளக்குறிச்சியில் 47 (ஆண்-24, பெண்-23) குழந்தைகளும், விழுப்புரத்தில் 27 (ஆண் 15, பெண்-12) குழந்தைகளும், மதுரையில் 22 குழந்தைகளும், சிவகங்கையில் 7 குழந்தைகளும், ராமநாதபுரத்தில் 6 குழந்தைகளும், விருதுநகரில் 6 குழந்தைகள் பிறந்து உள்ளன.

# தாயுமானவர் திட்டம்:நாளை முதல் இரு தினங்களுக்கு இல்லங்களுக்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகம்

**சென்னை ஜன 03-**

தாயுமானவர் திட்டத்தில் ஜனவரி 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் முதியோர் மாற்று திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்படுகிறது. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.இந்நிலையில், ஜனவரி மாதத்தின் 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் சென்னையில் அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையாறு, திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 990 நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள் அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை மாநகராட்சி ஆணையர் வீட்டை முற்றுகையிட்ட தூய்மை பணியாளர்கள் கைது

**சென்னை ஜன 03-**

சென்னை மாநகராட்சி, தூய்மைப்பணியை தனியாருக்கு வழங்க கூடாது எனவும், பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் மண்டலம் 5,6-வது தூய்மை பணியாளர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். X இது தொடர்பாக அரசு தரப்பில் பேச்சுவார்த்தைநடத்தப்பட்டாலும் உடன்பாடு எட்டப்படவில்லை. இதனால் அவர்கள் அவ்வப்போது திடீரென போராட்டத்தில் குதித்து வருகின்றனர். இதற்கிடையில் கடந்த ம் தேதி சென்னை அண்ணா சாலையில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் அருகே போராட்டத்தில் ஈடுபட தூய்மைப்பணியாளர்கள் பலர் திரண்டு வந்தனர். அவர்களசாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், போராட்டக்காரர்களை கைது செய்து பஸ்சில் ஏற்றி வைத்து ஆங்காங்கே உள்ள மண்டபத்தில் தங்கவைத்தனர்.

## இந்திய பள்ளிகளின் விளையாட்டு கூட்டமைப்பு நடத்தும் போட்டிகளில் வேலூர் மாவட்டத்திலிருந்து பங்கேற்கவுள்ள பள்ளி மாணவ, மாணவிகள்

### மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன் வழியனுப்பி வைத்தார்



**வேலூர்,ஜன.03**

தேசிய அளவிலான இந்திய பள்ளிகளின் விளையாட்டு கூட்டமைப்பு நடத்தும் 46 போட்டிகளில் வேலூர் மாவட்டத்திலிருந்து பங்கேற்கவுள்ள பள்ளி மாணவ, மாணவிகளை மாவட்ட வருவாய் அலுவலர்.மா.சிவசுப்பிரமணியன், (02.01.2026) வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

2025-26 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வித்துறையின்கீழ் இயங்கும் அனைத்து வகை பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் 14, 17,19 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு அனைத்த வகை விளையாட்டுப்போட்டிகள் குறுவட்டம் முதல் மாநிலப்போட்டிகள் வரை மற்றும் தேசிய அளவிலான இந்திய பள்ளிகளின் விளையாட்டு கூட்டமைப்பு SGFI(Shool Game Fedaretion of India) நடத்தும போட்டிகள் தமிழ்நாடு அரசனி வழிகாட்டுதலின்பேரில் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டை சார்ந்த மாணவ, மாணவியர்கள் தடகளப்போட்டிகள் முதல் யோகாசன போட்டிகள் வரை 46 போட்டிகளில் 117 இடங்களில் பங்கேற்க உள்ளனர். இதில் பளுதூக்குதல் போட்டிக்கு தேர்வான 19 வயதிற்குட்பட்ட 15 மாணவ, மாணவிகள் மற்றும் 4 அணி மேலாளர்கள் 06.01.2026 முதல் 09.01.2026 வரை மகாராஷ்டிரா மாநிலம் சம்பாஜி நகரில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

மேலும் கட்கா போட்டிக்கு தேர்வான 19 வயதிற்குட்பட்ட 16 மாணவ, மாணவிகள் மற்றும் 5 அணிமேலாளர்கள் 06.01.2026 முதல் 11.01.2026 வரை பஞ்சாப் மாநிலம் லூதியானா என்ற இடத்தில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளனர். கட்கா போட்டிக்கு தேர்வான 17 வயதிற்குட்பட்ட 16 மாணவ, மாணவிகள் மற்றும் 5 அணிமேலாளர்கள் 17.01.2026 முதல் 21.01.2026 வரை சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

இந்நிகழ்வின்போது முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் சரஸ்வதி உட்பட பலர் உடனிருந்தனர்.



**வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி நடந்தது. இதை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.**



அருள்திரு சக்தி அம்மா 50 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஜெய் ஸ்ரீராம் சேவா சங்கம் சார்பில் 6அடி உயர வெள்ளி வேல் பிஜேபி முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் வழங்கப்பட்டது.இதில் நிகழ்ச்சி ஏற்பாடு ஜெய் ஸ்ரீ ராம் சேவா சங்க தலைவர் டிகேடிஜி. சீனிவாசன் அமைப்பாளர் ஆர்.இளங்கோவன் மற்றும் சேவா சங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.

## செங்கம் ஸ்ரீ சக்தி பாலிடெக்னிக் கல்லூரியில் பாரதி உலா டைரக்டர் யார் கண்ணன் பங்கேற்பு



**செங்கம்,ஜன.03**

செங்கம் அடுத்த நாச்சிப்பட்டு ஸ்ரீ சக்தி பாலிடெக்னிக் கல்லூரியில் நம் உரத்த சிந்தனை, வாசகர் எழுத்தாளர்கள் சங்கம், விசு கல்வி அறக்கட்டளை இணைந்து பாரதி உலா 2025ன் 11வது நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவர் அக்ரி வெங்கடாஜலபதி தலைமை தாங்கினார். செல்வ நாராயண ரெட்டியார் கல்வி அறக்கட்டளை இயக்குனர் ரேகா ரெட்டி முன்னிலை வகித்தார். முதல்வர் செந்தில் முருகன் வரவேற்று பேசினார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக சினிமா இயக்குனர் யார் கண்ணன் கலந்து கொண்டு பல்வேறு கவிதை, பேச்சுப் போட்டிகளில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளித்து பேசினார். அப்போது புன்னகையும் நல்ல நட்பும், அன்புடனான அரவணைப்பும் எதிரிகள் இல்லாமல் உருவாக்கும். மனம் விட்டு சிரித்தலும், கைதட்டும் பகைமை, விரோதம், குரோதம் போக்கும் ஆயுளை அதிகரிக்கும். பல வங்கியில் உள்ள நிதிகளை விட நூலகத்தில் உள்ள நிதியே புத்தகங்களே விலை மதிப்பற்றது. அதை பயன்படுத்த வேண்டும் என பேசினார். விழாவினை வாழ்த்தி உரத்த சிந்தனை ஆசிரியர் உதயம் ராம், தொழிலதிபர் மாம்பலம் சந்திரசேகர், திருவண்ணாமலை எழுத்தாளர் உமா தேவி பலராமன், நல்லாசிரியர் அல்லிராணி ஆகியோர் பேசினர். நிகழ்ச்சியை ஆன்மீக சொற்பொழிவாளர் தனஞ்செயன் தொகுத்து வழங்கி பேசினார். முடிவில் கணித விரிவுரையாளர் அசோக்குமார் நன்றி கூறினார். சிறப்புரை பேசிய மாணவி விஜயலட்சுமிக்கு ரொக்க பரிசு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட ரெட்கிராஸ் தலைவர் இந்திரராஜன், ஓவியர் மணி, காணொளி தொகுப்பாளர் மனோன்மணி, தமிழ் பேராசிரியர் ரேகா, பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களிடையே வாக்காளர் பட்டியல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் சிறப்பு முகாம்

### கலெக்டர் சிவ சவுந்திரவல்லி தலைமையில் நடந்தது



**திருப்பத்தூர்,ஜன.03**

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, திருப்பத்தூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision – SIR), 2026 பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மாற்றுத்திறனாளி வாக்காளர்களிடையே வாக்காளர் பட்டியல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சிறப்பு முகாம் மாவட்ட தேர்தல் அலுவலர்.க.சிவசௌந்திரவல்லி,தலைமையில் (02.01.2026) நடைபெற்றது.

இம்முகாமின் போது, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாற்றுத் திறனாளி வாக்காளர்களிடம் தங்களது பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார். மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், மாற்றுத்திறனாளி வாக்காளர்களை வாக்காளர் எந்த வகையான மாற்றுத்திறனாளி என்ற விவரங்களை பதிவு செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்பங்களில் 18 வயது பூர்த்தியான வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது குறித்து துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதன்படி,படிவம் 6 – புதிய வாக்காளராக பெயரினை பதிவு செய்தல்,படிவம் 8 – குடியிருப்பு மாற்றம், வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்தல், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை நகல் பெறுதல் மற்றும்'' மாற்றுத்திறனாளி வாக்காளராக விவரங்களை பதிவு செய்தல்''. மேற்படி விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கு தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், படிவம் 6 மற்றும் படிவம் 8 ஆகியவை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டன. மேற்படி படிவங்களை நிரப்புவதற்கு TN-Rights தன்னார்வலர்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக வந்து உதவி செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.இந்த சிறப்பு முகாம் மூலம், எந்த ஒரு தகுதியான மாற்றுத்திறனாளி வாக்காளரும் வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபடாமல் இருப்பதை உறுதி செய்யவும், மாற்றுத்திறனாளியாக வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யவும் வகையில் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, தங்களது வாக்காளர் விவரங்களை சரிபார்த்து, புதியதாக சேர்ப்பதற்க்கும் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்டஆட்சியர்க.சிவசௌந்திரவல்லி,சிறப்பு முகாம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.இந்நிகழ்வில், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர்கண்ணன், தேர்தல் வட்டாட்சியர்திருமலை, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## திருவண்ணாமலையில் 45 ஆண்டுகளுக்கு பிறகு பட்டா: தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்த பழங்குடியின மக்கள்



**திருவண்ணாமலை ஜன.3-**

திருவண்ணாமலையில் நான்கு தலைமுறைகளாக பட்டா இன்றி வாழ்ந்து வந்த பழங்குடியின மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை - திருக்கோயிலூர் சாலை கரியாஞ்செட்டி பகுதியில் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு 1977-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டா அரசு கணக்கில் ஏற்றப்படவில்லை. இதனால் தங்களுக்கு மீண்டும் பட்டா வழங்க கேட்டு அவர்கள் பல வருடங்களாக அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவர்களுக்கு பட்டா வழங்க கேட்டு தென்னிந்திய பழங்குடியினர் இருளர் முன்னேற்ற சங்கம் தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனுக்களை அனுப்பியிருந்தது.

இந்நிலையில் சமீபத்தில் திருவண்ணாமலைக்கு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கரியாஞ்செட்டி பகுதியைச் சேர்ந்த 36 பேருக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். நான்கு தலைமுறை கோரிக்கைக்கு இப்போதுதான் தீர்வு கிடைத்திருக்கிறது. முதல்வர் எங்களின் கோரிக்கையை ஏற்று பட்டா வழங்கி இருப்பது எங்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறிய பழங்குடியின மக்கள் தமிழக முதல்வருக்கு தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து தென்னிந்திய பழங்குடியினர் இருளர் முன்னேற்ற சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் எம்.சரவணன், மாநில பொருளாளர் ஏ.பி.சுப்பிரமணியன், மாநிலத் துணைத் தலைவர்கள் ஜி. ஆனந்தன், மாரி, மாநில துணைப் பொதுச் செயலாளர் எம்.சிலம்பரசன், மாநில ஒருங்கிணைப்பாளர் கே.முருகன் ஆகியோர் வீட்டு மனை பட்டா பெற்ற பழங்குடியின மக்களோடு சென்று திருவண்ணாமலை கோட்டாட்சியர் எஸ்.ராஜ்குமாரை நேரில் சந்தித்து நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர். அப்போது கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் எம்.சௌந்தர்ராஜன், கண்காணிப்பாளர் சி.வேணுகோபால் துணை வட்டாட்சியர் வ.தனபால் ஆகியோர் உடனிருந்தனர்.

இதேபோல் அமைச்சர் எ.வ.வேலு, மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், மாநகராட்சி மேயர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவித்துள்ளனர். மேலும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வசித்துவரும் இருளர் இன மக்களுக்கு எஸ்டி சாதிச்சான்றிதழ் வழங்கியதற்கு தென்னிந்திய பழங்குடியினர் முன்னேற்ற சங்கம் அரசுக்கு நன்றியினை தெரிவித்துள்ளது.

## செங்கம் ராமகிருஷ்ண மடத்தில் கல்பதரு தின கொண்டாட்டம்



**செங்கம் ஜன.03**

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர், கடந்த 1986ம் ஆண்டு ஜன.1ம் தேதி எல்லாருக்கும் ஆன்மிக விழிப்புணர்வு ஏற்படட்டும் என ஆசீர்வதித்தார். அதைத் தொடர்ந்து, அந்த நாளை கல்பதரு தினமாக ஆண்டுதோறும் ராமகிருஷ்ண மடம் சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் செங்கம் போளூர் சாலையில் உள்ள ராமகிருஷ்ண மடத்தில் கல்பதரு தின சிறப்பு வழிபாடு நடந்தது. இதை முன்னிட்டு, ராமகிருஷ்ண மடத்தில் காலை சிறப்பு பூஜை, பஜனை, குங்கும அர்ச்சனை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட ராமகிருஷ்ணர் படம் கோயில் வளாகத்தில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. மதியம் செங்கம் ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சதுர்புஜானந்தர் பக்தர்களுக்கு ஆசி வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு ராமகிருஷ்ண விவேகானந்தர் பாவ பிரச்சார் பரிஷத் மாநில கன்வீனர் பாண்டுரங்கன், கணேசர் குருப்ஸ் ரவீந்திரன், செயலாளர் ராமமூர்த்தி, சுவாமி விவேகானந்தா சேவா சங்கம் நிர்வாகிகள் த.சீனு, ராமஜெயம், கு.சீனு, கம்ப்யூட்டர் பிரபாகரன், அன்னை சாரதா தேவி அறக்கட்டளை நிர்வாகிகள், ஏராளமான பக்தர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்

## பொன்னேரி ஊராட்சியை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர்கள் அதிமுகவில் இணைந்தனர்



**திருப்பத்தூர், ஜன. 3-**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த பொன்னேரி ஊராட்சியை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் திமுக உள்ளிட்ட கட்சியில் இருந்து விலகி அதிமுக மாவட்ட செயலரரும் முன்னாள் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் கே.சி.விரமணி யின் தலைமையில் அதிமுகவில் இணைந்தனர். மாற்று கட்சியில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்த நபர்களுக்கு முன்னாள் அமைச்சர் கே சி வீரமணி அவர்கள் கட்சியின் சால்வை போர்த்தி வரவேற்று வாழ்த்துகளை தெரிவித்தார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

கண், ரத்த தானம் செய்வீர்

## ராணிப்பேட்டை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்

### அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்




**ராணிப்பேட்டை,ஜன.03**

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்ஆர்.காந்தி (2.1.2026) ராணிப்பேட்டை கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தலா ரூ.25,936/- மதிப்பீட்டிலான புல்நறுக்கும் கருவிகளை அரசின் 50 சதவீதம் மானியம் ரூ.12,968/- வீதம் 40 பயனாளிகளுக்கு ரூ.5.18 இலட்சம் மதிப்பீட்டில் புல்நறுக்கும் கருவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர்ஜெ.யு.சந்திரகலா, தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்.ஜெ.எல்.ஈஸ்வரப்பன் முன்னிலை வகித்தார்கள்.இந்த புல்நறுக்கும் கருவிகள் மூலம் புல், சோளம், கரும்புச் சக்கை போன்றவற்றை சிறு துண்டுகளாக வெட்டி கால்நடைகளுக்கு உணவாக அளிக்கலாம். சிறிய துண்டுகளாக வெட்டும்போது, விலங்குகளுக்கு தீவனத்தை ஜீரணிக்க எளிதாகிறது, ஊட்டச்சத்துக்கள் நன்றாக உறிஞ்சப்படும். பெரிய தீவனங்களை கால்நடைகள் சாப்பிடாமல் வீணாக்குவதைத் தடுக்கிறது. கைகளால் வெட்டுவதை விட இயந்திரம் மூலம் விரைவாகவும், அதிக அளவிலும் தீவனத்தை தயாரிக்க முடியும்.இந்நிகழ்ச்சியில் நகரமன்ற தலைவர்.சுஜாதா வினோத், துணைத் தலைவர்ரமேஷ் கர்ணா, மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத் துறை மரு.பிரசன்னா, துணை இயக்குநர் மரு.வெங்கடேசன், உதவி இயக்குநர் மரு.திருநாவுக்கரசு, இயக்குனர் Iரூத்சோபிலா, கால்நடை மருத்துவர் மரு.தணிகை வேலு, உதவி மருத்துவர்கள் மரு.சதிஷ்பாபு, மரு.லட்சுமணன், மரு.செந்தில் வளவன், மரு. சுகன்யா, மரு.ஓம் சிவ பிரகாசம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தாழனூர் கிராமத்தில் அதிமுக சார்பில் மின்னொளி விளையாட்டு திடல் திறப்பு விழா




**ராணிப்பேட்டை,ஜன,3-**

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த தாழனூர் கிராமத்தில் அ.தி.மு.க சார்பில் மின்னொளியுடன் கூடிய கைப்பந்து மற்றும் பூப்பந்தாட்ட விளையாட்டு திடல் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு ஆற்காடு மேற்கு ஒன்றிய அ தி மு க செயலாளர் என்.சாரதி(எ) ஜெயச்சந்திரன் தலைமை தாங்கினார்.மாவட்ட பிரதிநிதி பி.தேவன், விவசாய பிரிவு மாவட்ட தலைவர் ஏ.என்.சஞ்சீவி, சார்பு அணி நிர்வாகிகள் மோட்டூர் ரவி,தாமோதரன், சம்பத், ரவிக்குமார்,யோகேஷ் ,நசீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளை செயலாளர் சேட்டு வரவேற்றார். விழாவில் ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.சுகுமார் கலந்து கொண்டு விளையாட்டு திடலை திறந்து வைத்து உபகரணங்கள் மற்றும் ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற இளைஞர்களுக்கு பரிசுகள் வழங்கி பேசினார். இந்த விழாவில் மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை தலைவர் எஸ்.எம் .எஸ் கோபிநாத் நேரு இளைஞர் நற்பணி மன்ற தலைவர் சுகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

### இந்திய மகளிர் ஹாக்கி அணியின்
# புதிய தலைமை பயிற்சியாளராக ஸ்ஜோர்ட் மரிஜ்னே நியமனம்



**சென்னை, ஜன. 03-**
தலைமை பயிற்சியாளராக ஸ்ஜோர்ட் மரிஜ்னே மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஹாக்கி இந்தியா நேற்று அறிவித்தது.

**மீண்டும் நியமனம்....**
இந்திய மகளிர் ஹாக்கி அணியின் தலைமை பயிற்சியாளராக ஸ்ஜோர்ட் மரிஜ்னே மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஹாக்கி இந்தியா நேற்று அறிவித்துள்ளது. அவரது முதல் தொடராக மார்ச் 8 முதல் 14, வரை ஐதராபாத்தில் நடைபெறும் பெண்கள் ஹாக்கி உலகக் கோப்பை தகுதி சுற்று இருக்கும்.

**உலக அரங்கில்....**
பயிற்சியாளர் நியமனம் குறித்து மரிஜ்னே கூறியதாவது, 4.5 ஆண்டுகளுக்குப் பிறகு புதிய ஆற்றல் மற்றும் தெளிவான தொலைநோக்குடன் திரும்புகிறேன். அணியின் வளர்ச்சியை ஆதரித்து, வீரர்கள் தங்கள் முழு திறனை உலக அரங்கில் அடைய உதவுவேன்" என்றார்.

## டி-20 உலக கோப்பை குறித்து அஸ்வின்

10-வது டி20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியா மற்றும் இலங்கையில் பிப்ரவரி 7-ந்தேதி முதல் மார்ச் 8-ந்தேதி வரை நடக்கிறது. இதில் பங்கேற்கும் 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்த முறை ஐசிசி டி20 உலக கோப்பையை யாரும் பார்க்கப் போவதில்லை என தமிழக வீரர் அஸ்வின் கூறியுள்ளார். இது குறித்து ரவிச்சந்திரன் அஸ்வின் கூறியதாவது:- இந்த முறை ஐசிசி டி20 உலக கோப்பையை யாரும் பார்க்கப் போவதில்லை. இந்தியா மற்றும் அமெரிக்கா மற்றும் இந்தியா மற்றும் நமீபியா போன்ற போட்டிகள் உங்களை டி20 உலக கோப்பையிலிருந்து உண்மையில் விலக்கி வைக்கின்றன.

1996, 1999 மற்றும் 2003 -ம் ஆண்டுகளில், நான் பள்ளியில் இருந்தபோது, உலக கோப்பை சிறப்பு வாய்ந்ததாக உணர்ந்தோம். உலகக் கோப்பை அட்டைகளைச் சேகரித்து அட்டவணையை அச்சிட்டோம். ஏனெனில் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வந்தது. அந்த எதிர்பார்ப்பு இயல்பாகவே உருவாகும். இந்தியா முதல் சுற்றில் இங்கிலாந்து, இலங்கை போன்ற அணிகளை எதிர்கொள்ளும். அது அதை இன்னும் உற்சாகப்படுத்தியது. இன்றைய காலகட்டத்தில், அந்த எதிர்பார்ப்பு உணர்வு இல்லை.

### நாமக்கல்லில் சிறுவன் உயிரிழப்பு:
# இழப்பீட்டை உயர்த்தி வழங்க எடப்பாடி பழனிசாமி கோரிக்கை



**சென்னை, ஜன. 03-**
நாமக்கல்லில் சிறுவன் உயிரிழந்த விவகாரத்தில் இழப்பீட்டை உயர்த்தி வழங்க எடப்பாடி பழனிசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், நாமக்கல் மாநகராட்சியின் 4-வது வார்டில் பாதாள சாக்கடைக்காக தோண்டப்பட்ட, தண்ணீர் தேங்கிய 5 அடிக் குழியில் தவறி விழுந்ததில் 4 வயது சிறுவன் ரோகித் பரிதாபமாக உயிரிழந்ததாக வரும் செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. சிறுவன் ரோகித்தின் உயிரிழப்புக்கு முழு காரணம் அரசின் அலட்சியம் மட்டுமே.

இது போன்ற உயிரிழப்பு நேர்வது இதென்ன முதல் முறையா? தவறு என்பது ஒருமுறை நிகழ்வது தான். மீண்டும் மீண்டும் நடப்பது என்பது, நிர்வாகச் சீர்கேடால் நடந்த கொலை என்று சொன்னால் கூட அது மிகையாகாது. பச்சிளம் பிள்ளையை இழந்து வாடும் அந்த பெற்றோருக்கு என்ன பதில் சொல்லப்போகிறார் முதல்வர்?

உயிரிழந்த சிறுவன் ரோகித்தின் பெற்றோருக்கு எனது ஆழ்ந்த இரங்கல். அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிவாரணம் நிச்சயம் போதுமானது அல்ல. எவ்வளவு கொடுத்தாலும் குழந்தையின் இழப்புக்கு ஈடாகாது எனினும், இழப்பீட்டை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும், பாதாள சாக்கடை உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் போது, முழுமையான பாதுகாப்பு நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ஆஷஸ் சிட்னி டெஸ்ட் போட்டி:
# இங்கிலாந்து அணி அறிவிப்பு



**லண்டன், ஜன. 03-**
ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்தின் 12 பேர் கொண்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுப்பயணம்...**
ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க 'ஆஷஸ்' தொடரில் விளையாடி வருகிறது. முதல் மூன்று போட்டிகளில் தொடர்ச்சியாக அபார வெற்றிபெற்று தொடரை 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றிய ஆஸ்திரேலிய அணி, மெல்பர்னில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து அணியிடன் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

**கடைசி டெஸ்ட்...**
இங்கிலாந்து அணி, 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று நிலையில், ஆஷஸ் தொடரை இழந்தபோதும், நீண்டகால இடைவெளிக்குப் பிறகு இந்த வெற்றி அந்த அணிக்கு ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது. இவ்விரு அணிகள் மோதும் 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியான பிங்க் டெஸ்ட், சிட்னி கிரிக்கெட் திடலில் நாளை (ஜன. 4) துவங்குகிறது.

**12 பேர் அணி...**
இந்த நிலையில், சிட்னி டெஸ்ட் தொடருக்கான 12 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயத்தால் போட்டியில் இருந்து விலகிய வேகப் பந்து வீச்சாளர் கஸ் அகிட்சனுக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் சோயப் பஷீர் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் மேத்யூ போட்ஸ் இருவரும் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆஸ்திரேலிய மண்ணில் 5,468 நாள்களுக்குப் பிறகு மெல்பர்னில் கிடைத்த மாபெரும் வெற்றிக்குப் பிறகு அதே உத்வேகத்துடன் இங்கிலாந்து அணி கடைசிப் போட்டியிலும் வெற்றிபெற முனைப்புக் காட்டி வருகிறது.

**இங்கிலாந்து அணி:**
பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஷோயப் பஷீர், ஜேக்கப் பெத்தெல், ஹாரி ப்ரூக், பிரைடன் கார்ஸ், ஸாக் கிராவ்லி, பென் டக்கெட், வில் ஜாக்ஸ், மேத்யூ பாட்ஸ், ஜோ ரூட், ஜேமி ஸ்மித் (விக்கெட் கீப்பர்), ஜோஷ் டங்.

## மீண்டும் வீனஸ் வில்லியம்ஸ்



டென்னிஸ் போட்டியின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலிய ஓபன் தொடர் வரும் ஜனவரி 18 முதல் பிப்ரவரி 1 வரை மெல்போர்ன் நடக்க உள்ளது. இந்த தொடரில் ஆண்கள் மற்றும் பெண்கள் சிங்கிள்ஸ், டபுள்ஸ், மிக்ஸ்ட் டபுள்ஸ், வீல்சேர் உள்ளிட்ட போட்டிகள் நடைபெறும். இதில் டாப் 100 வீரர்களில் 99 ஆண்கள் மற்றும் 98 பெண்கள் பங்கேற்கின்றனர். இந்நிலையில் இந்த தொடரில் அமெரிக்காவை சேர்ந்த டென்னிஸ் வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (45 வயது), 5 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆஸ்திரேலியா ஓபன் தொடரில் விளையாட உள்ளார்.

7 முறை கிராட்ண்ஸ்லாம் ஜாம்பியனான இவர் வைல்ட் கார்டு மூலம் விளையாட உள்ளார். இதனால் அவரது ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர். ஆஸ்திரேலிய ஓபன் போட்டியிடும் விளையாடுவதன் மூலம் மிக வயதான பெண் வீரராக வரலாறு படைப்பார். இதற்கு முன் ஜப்பானின் கிமிகோ டேட் 44 வயதில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வை அறிவித்த கவாஜா



வரும் 4-ம் தேதி சிட்னியில் தொடங்கும் ஆஷஸ் தொடரின் 5-வது டெஸ்ட் போட்டிதான் தனது கடைசி போட்டி என ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் உஸ்மான் கவாஜா அறிவித்துள்ளார். 39 வயதான உஸ்மான் கவாஜா, பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் பிறந்தவர். அவரது குடும்பம் ஆஸ்திரேலியாவில் குடிபெயர்ந்தது. அப்போது அவருக்கு வயது 4. கிரிக்கெட் மீது ஆர்வம் கொண்ட கவாஜா, ஆஸ்திரேலியாவில் உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடி, தனது அபார ஆட்டத்திறனை வெளிப்படுத்தி தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பை பெற்றார். டாப் ஆர்டரில் ஆடும் இடது கை பேட்ஸ்மேன்.

கடந்த 2010-11 ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டியில் கவாஜா அறிமுக வீரராக களம் கண்டார். அந்தப் போட்டி சிட்னியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இதுவரை 87 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6,206 ரன்களை அவர் எடுத்துள்ளார். இதில் 16 சதங்கள் மற்றும் 28 அரைசதங்கள் அடங்கும். 2021-23ல் ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டம் வென்ற ஆஸ்திரேலிய அணியில் கவாஜா அங்கம் வகித்தார். அந்த சீசனில் அவர் 1,621 ரன்கள் எடுத்திருந்தார். ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் வீரர் (2023) விருதையும் அவர் வென்றுள்ளார். "அனைத்துவிதமான சர்வதேச கிரிக்கெட்டில் இருந்தும் நான் ஓய்வு பெறுகிறேன். எதிர்வரும் சிட்னி டெஸ்ட் போட்டிதான் நான் விளையாடும் கடைசிப் போட்டி" என கவாஜா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## ஜே.எஸ்.கே. த்ரில் வெற்றி

எஸ்ஏ 20 கிரிக்கெட்டில் முதல்முறையாக சூப்பர் ஓவர் வரைக்கும் சென்ற ஆட்டம் ரசிகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகிறது. ஜே.எஸ்.கே. (ஜோபர்க் சூப்பர் கிங்ஸ்) அணியும் டிஎஸ்ஜி (டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ்) அணியும் மோதின. டாஸ் வென்ற டிஎஸ்ஜி அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில் பேட்டிங் விளையாடிய ஜே.எஸ்.கே. அணி 20 ஓவர்களில் 205/4 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக சுபம் ரஞ்சனே 50, டு பிளெஸ்ஸி 47 ரன்கள் குவிக்க, கடைசியில் வந்த டோனவன் ஃபெரேரா 10 பந்துகளில் 33 ரன்கள் குவித்து ஆட்டத்தை மாற்றினார்.

அடுத்தாக பேட்டிங் விளையாடிய டிஎஸ்ஜி அணி 20 ஓவர்களில் 205/8 ரன்கள் எடுத்தது. கடைசி பந்தில் 1 ரன் தேவையான நிலையில் ரன் அவுட் ஆனது. சூப்பர் ஓவரில் டிஎஸ்ஜி அணி 5/1 ரன்கள் எடுக்க, ஜே.எஸ்.கே. அணி 3 பந்துகளில் 8/0 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன்மூலம், ஜே.எஸ்.கே. அணிபுள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

# முதல்வரின் அறிவிப்பை பொருத்து அடுத்த கட்ட நடவடிக்கை இருக்கும்
### ஜாக்டோ ஜியோ அறிவிப்பு

**சென்னை, ஜன. 03-**
முதல்வரின் அறிவிப்பைப் பொருத்து எங்களுடைய அடுத்த கட்ட நடவடிக்கை இருக்கும் என அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கமான ஜாக்டோ-ஜியோ கூறியுள்ளது.


சம வேலைக்கு சம ஊதியம், பழைய ஓய்வூதியத் திட்டம், புதிய பணியிடங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இடைநிலை ஆசிரியர்கள் 8-வது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனிடையே அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகளிடம் அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு ஆகியோர் நேற்று (ஜன. 2) பேச்சு வார்த்தை நடத்தினர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜாக்டோ-ஜியோ அமைப்பினர், "பழைய ஓய்வூதியத் திட்டத்தை முதல்வர் இன்று அறிவிப்பார் என்று நம்பிக்கையுடன் இருக்கிறோம். மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கிறோம். சுமார் 22 ஆண்டுகளாக இதற்காக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம்.

பழைய ஓய்வூதியத் திட்டம் எங்களது போராட்டத்தின் முக்கிய நோக்கம். முதல்வரின் அறிவிப்பைப் பொருத்து மாநில நிர்வாகிகளுடன் ஆலோசித்து நாங்கள் ஏற்கெனவே அறிவித்த வேலைநிறுத்தப் போராட்டம் குறித்து முடிவெடுப்போம். மற்ற கோரிக்கைகள் குறித்தும் அமைச்சர்களிடம் பேசியிருக்கிறோம். அதுகுறித்த அறிவிப்பும் இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கிறோம்" என்று கூறியுள்ளனர்.

முன்னதாக பழைய ஓய்வூதியத் திட்டம், காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜன. 6 முதல் ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அர்ஜுன் டெண்டுல்கர் பேட்டிங்கில் கவனம் செலுத்த வேண்டும்
### யுவராஜ் தந்தை யோசனை



**மும்பை, ஜன. 03-**
அர்ஜுன் டெண்டுல்கர் பேட்டிங்கில் கவனம் செலுத்த வேண்டும் என்று யுவராஜ் தந்தை யோசனை தெரிவித்துள்ளார்.

**வேகப்பந்து வீச்சாளர்....**
இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர். இவர் அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு அறிவித்து விட்டார். ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியின் ஆலோசகராக உள்ளார். இவரது மகனாக அர்ஜுன் டெண்டுல்கர் இடதுகை வேகப்பந்து வீச்சாளராக உள்ளார். ஐ.பி.எல். தொடரில் கடந்த 2 ஆண்டுகளாக இருந்தார். அவருக்கு பெரும்பாலான போட்டிகளில் விளையாட வாய்ப்பு வழங்கப்படவில்லை. குறிப்பாக கடந்த ஆண்டு ஒரு போட்டியில் கூட விளையாடவில்லை. இதனையடுத்து கடந்த ஆண்டு ஏலத்திற்கு முன்பாக லக்னோ அணி ஷர்துல் தாக்கூருக்கு பதிலாக அர்ஜுன் டெண்டுல்கரை வாங்கியது.

**கவனம் செலுத்த...**
அவர் தற்போது ஐ.பி.எல். தொடருக்காக பந்து வீச்சு மட்டும் பேட்டிங்கில் தீவிர பயிற்சியில் ஈடுப்பட்டு வருகிறார். இந்த நிலையில் இவரது பேட்டிங்கை பார்த்த இந்திய அணியின் முன்னாள் வீரரும் யுவராஜ் சிங் தந்தையுமான யோகராஜ் பாராட்டி உள்ளார். அதில், "அர்ஜுன் டெண்டுல்கர் பேட்டிங்கில் கவனம் செலுத்த வேண்டும், அவர் ஒரு தரமான பேட்ஸ்மேன், அவர் சச்சினைப் போலவே பேட்டிங் செய்கிறார்" என்றார்.

### தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்குப் பிறகு
# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இதுவரை 7 லட்சம் பேர் விண்ணப்பம்

**சென்னை, ஜன. 03-**
தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்குப் பிறகு வரைவு வாக்காளர் பட்டியல் வெளியான நிலையில் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர சுமார் 7 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்(எஸ்.ஐ.ஆர்.) பணிகள் முடிவடைந்து கடந்த டிச. 19 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியானது. இதில், எஸ்.ஐ.ஆருக்கு முன்பு தமிழ்நாட்டில் 6.41 கோடி வாக்காளர்கள் இருந்த நிலையில் தற்போது 5.43 கோடி வாக்காளர்கள் மட்டுமே உள்ளனர். எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளில் மொத்தம் 97,37,832 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணி வருகிற ஜன. 18 வரை நடைபெறுகிறது. இதையொட்டி தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்க்க 7,37,807 பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளதாக தமிழக தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. மேலும் வாக்காளர் பட்டியலில் இருந்து 9,535 பேரை நீக்க விண்ணப்பம் வழங்கப்பட்டுள்ளது. வருகிற பிப்ரவரி 17 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகிறது. இதனிடையே வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள 12.43 லட்சம் பேருக்கு விளக்கம் கேட்டும் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வைகோ நடைபயணத்தை புறக்கணித்த காங்கிரஸ்

**திருச்சி, ஜன. 03-**
ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவின் சமத்துவ நடைபயணத்தை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் புறக்கணித்துள்ளனர்.

திருச்சி தென்னூர் அண்ணா நகர் உழவர் சந்தை திடலில் வைகோவின் நடைபயணத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வின் தொடக்க விழாவில் பங்கேற்க திமுக, காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, மநீம உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களை நேரில் சந்தித்து ம.தி.மு.க. நிர்வாகிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

தொடக்க விழா அழைப்பிதழில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் அச்சிடப்பட்டிருந்ததற்கு தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப் பெருந்தகை அதிருப்தி தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் விடுதலை புலிகளுக்கு நேரடித் தொடர்பு இருப்பதால், அந்த அமைப்பை காங்கிரஸ் கட்சியினர் புறக்கணித்து வந்தனர்.

இந்த நிலையில், நேற்று நடைபெற்ற தொடக்க விழாவில் செல்வப் பெருந்தகை கலந்துகொள்ளவில்லை. மேலும், மாநில, மாவட்ட நிர்வாகிகள் என யாரும் பங்கேற்கவில்லை.

முன்னதாக, திருச்சி விமான நிலையத்துக்கு வருகைதந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்கும் நிகழ்விலும் காங்கிரஸ் மாவட்ட நிர்வாகிகள் யாரும் கலந்துகொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

# கிரிக்கெட் வீரர்களுக்கு புத்தாண்டு விருந்தளித்த ஆஸ்திரேலிய பிரதமர்



**சிட்னி, ஜன. 03-**
புத்தாண்டை முன்னிட்டு இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களை ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானீஸை நேரில் சந்தித்தார். ஆஸ்திரேலிய பிரதமர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. கிரிக்கெட் வீரர்களுடன் ஒன்றரை மணி நேரம் உரையாடிய அவர் புத்தாண்டு விருந்து அளித்தார்.

**தொடரை வென்றது...**
ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் நடைபெற்ற 4 போட்டிகளின் முடிவில் ஆஸ்திரேலியா 3-1 என தொடரைக் கைப்பற்றியுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 5-வது டெஸ்ட் போட்டி வரும் 4-ம் தேதி நடைபெற உள்ளது.

**கலந்துரையாடல்...**
இந்நிலையில், புத்தாண்டை முன்னிட்டு இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களை ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானீஸை நேரில் சந்தித்தார். ஆஸ்திரேலிய பிரதமர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. கிரிக்கெட் வீரர்களுடன் ஒன்றரை மணி நேரம் உரையாடிய அவர் புத்தாண்டு விருந்து அளித்தார். அப்போது இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணி வீரர்களுடன் ஆண்டனி அல்பானீஸ் உற்சாகமாக கலந்துரையாடினார்.

**இளஞ்சிவப்பு கடலாக...**
இந்தச் சந்திப்பு பற்றி ஆண்டனி அல்பானீஸ் தனது இன்ஸ்டாகிராமில், இது வேறு எந்தத் தொடரையும் போலல்லாத ஒரு ஆஷஸ் தொடராக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை முதல் சிட்னி மைதானம் ஆஸ்திரேலிய ரசிகர்களும் பார்மி ஆர்மியும் மெக்ராத் அறக்கட்டளையின் சிறந்த பணியை ஆதரிக்கும் இளஞ்சிவப்பு கடலாக இருக்கும். ஆஸ்திரேலியாவுக்குப் போவோம் என பதிவிட்டுள்ளார்

# தி.மு.க. ஆட்சியில் 4.5 ஆண்டுகளில் 3967 கோவில்களுக்கு கும்பாபிஷேகம்
### அமைச்சர் சேகர்பாபு தகவல்

**நாகர்கோவில், ஜன. 03-**
தி.மு.க. ஆட்சியில் 4.5 ஆண்டுகளில் 3967 கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு சுசீந்திரத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தி.மு.க. ஆட்சியில் குமரி மாவட்டத்தில் 300-க்கும் மேற்பட்ட திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 127 கோவில்கள் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. நீண்ட கோரிக்கைகளுக்கு பிறகு திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவிலில் கும்பாபிஷேகமும், மண்டைக்காடு பகவதியம்மன் கோவிலில் ஏற்பட்ட தீவிபத்துக்கு பிறகு கோவிலில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் அதிகளவில் தி.மு.க. ஆட்சியில் தான் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது என்பதை நாங்கள் பெருமையுடன் கூறுவோம். அதேபோல் 12 திருக்கோவில்களுக்கு சொந்தமான 20 திருத்தேர்கள் ரூ.1.85 கோடி செலவில் தேர்களுக்கான பாதுகாப்பு கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

6 கோவில்களுக்கு சொந்தமான 8 குளங்கள் ரூ.2.19 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. சுசீந்திரம் கோவில் குளம் புனரமைக்கும் பணிகள் ரூ.34 லட்சம் செலவில் நடந்தபோது எதிர்பாராதவிதாக ஏற்பட்ட சரிவினால் அந்த பணிகளுக்கு மறுஒப்பந்தம் கோர ஆணையருக்கு அனுப்பட்டுள்ளது. ஆணையர் அனுமதி பெற்று இந்த மாத இறுதிக்குள் மீண்டும் பணிகள் தொடங்கும்.

தெப்பத்திருவிழாவை முன்னிட்டு சுசீந்திரம் குளத்தை செப்பனிடும் பணிகள் போர்க்கால அடிப்படையில் முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சியின்போது கடந்த 2021-ம் ஆண்டு குமரி மாவட்ட கோவில்களுக்கு மொத்தமாக ரூ.3 கோடி மானியம் அரசு வழங்கியது. இவ்வாறு அவர் கூறினார்.

## தேர்தல் வாக்காளர் சிறப்பு திருத்த முகாமில் அ.தி.மு.க. நிர்வாகிகள் சிறப்புற பணியாற்றி

# தமிழ்நாட்டில் மீண்டும் எடப்பாடியார் தலைமையில் ஆட்சி மலர பாடுபடுவோம்

### கழக பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன் பேச்சு



**திண்டுக்கல், ஜன.03-**

100 நாள் வேலைத்திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தப்பட வேண்டும் என கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் கோரிக்கையை ஏற்று பிரதமர் மோடி அறிவித்து உள்ளார். தி.மு.க.வின் பொய் பிரச்சாரத்தை நம்ப வேண்டாம் என்றும் தேர்தல் வாக்காளர் சிறப்பு திருத்த முகாமில் கழக நிர்வாகிகள் சிறப்புற பணியாற்றி மீண்டும் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தலைமையில் நல்லாட்சி மலர பாடுபடுவோம் என திண்டுக்கல்லில் நடைபெற்ற மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் பேசினார்.

திண்டுக்கல் மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கழக பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஜனவரி 31ஆம் தேதி நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர் எடப்பாடியார் தெரிவித்த கருத்துக்களை மாவட்ட கழக நிர்வாகிகளிடம் கழக பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் விரிவாக எடுத்து கூறினார். பின்னர் அவர் கழக நிர்வாகிகளிடையே ஆலோசனைகளை வழங்கி பேசுகையில்,

வருகிற சனி, ஞாயிறு நடைபெறவுள்ள தேர்தல் வாக்காளர் சிறப்பு திருத்தம் முகாமில் விடுபட்ட வாக்காளர்கள், அதேபோன்று புதிய வாக்காளர்கள், பெயர் திருத்த வாக்காளர்கள் ஆகியோரின் ஆதார் அட்டைகளை பெற்று நேரடியாக சமர்ப்பித்து கழக நிர்வாகிகள் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும். சென்ற முறை நடைபெற்ற தேர்தல் வாக்காளர் சிறப்பு திருத்த முகாமில் முதல் 15 நாட்கள் முறையாக நடைபெற்றன. ஆனால் அடுத்ததாக நடைபெற்ற முகாமில் மிகப்பெரிய குளறுபடி ஏற்பட்டு உள்ளது.எனவே 6,7, 8, வாக்காளர் விண்ணப்பம் படிவம் பெற்று புதிய வாக்காளர்களை சேர்த்தல், நீக்கம் திருத்தம் செய்திட வேண்டும்.

100 நாள் வேலைத்திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தப்பட வேண்டும் என கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் கோரிக்கையை ஏற்று பிரதமர் மோடி அறிவித்து உள்ளார். கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் வேண்டுகோளின் படியே தான் பிரதமர் மோடி இந்த அறிவிப்பை வெளியிட்டு உள்ளார். மீண்டும் கழக பொதுச்செயலாளர் எடப்பாடியார் தலைமையில் 2026 ல் நல்லாட்சி மலருகின்ற பொழுது 150 நாட்களாக உயர்த்தப்படும் என கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி யார் அறிவித்து உள்ளார்.

ஆனால் 100 நாள் வேலை நாள் திட்டத்தையே நிறுத்தி விடுவார்கள் என தி.மு.க.வினர் பொய் பிரச்சாரம் செய்து வருகின்றனர் இதனை பொதுமக்கள் நம்ப வேண்டாம்.

தேர்தலின் போது கள்ள ஓட்டு போடுவதில் தி.மு.க.வினர் வல்லவர்கள் ஆவார்கள், அவர்கள் ஒவ்வொரு பூத்துகளின் மூலம் பிஎல்ஒக்களை கொண்டு 300 பொய்யான வாக்குகளை சேர்த்து உள்ளனர். அதனை நீக்க வேண்டுமென மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்து அந்த வாக்குகளை நீக்கிவிடலாம்.

விண்ணை முட்டும் தி.மு.க. ஆட்சியில் விலைவாசி பட்டியல் கழக ஆட்சியின் விலைவாசி பட்டியலை துண்டு பிரசுரங்களாக பிரசூரித்து மக்களுக்கு அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

புரட்சித்தலைவர் எம்ஜிஆரின் பிறந்த நாளான ஜனவரி 17ம் தேதி, புரட்சித்தலைவி அம்மாவின் பிறந்த நாளான 24ம் தேதி ஆகிய நாட்களை வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும். புரட்சித்தலைவர் எம்ஜிஆர் புரட்சித்தலைவி அம்மாவின் பாடல்களை ஒளிபரப்ப வேண்டும். வார்டு தோறும் கிளை கழகங்கள் மூலமாக சிறப்பாக நடத்திட வேண்டும். பெண்களுக்கு கோலப் போட்டி, ஆண்களுக்கு கிரிக்கெட், சடுகுடு, கபடி போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்க வேண்டும் இவ்வாறு கழகப் பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் பேசினார்.

நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் வி.மருராஜ், மாநில இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி.பி.பரமசிவம், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சி.எஸ். ராஜ்மோகன்,

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தென்னம்பட்டி பழனிச்சாமி, திண்டுக்கல் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் என். இராஜசேகரன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், திண்டுக்கல் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் தர்மராஜ், மாவட்ட பொருளாளர் எஸ்.ஏ. பழனிவேல், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், ராஜன், சேசு, முரளி, இக்பால், குஜிலியம்பாறை ஒன்றிய கழக செயலாளர்கள் மலர்வண்ணன், பெருமாள்,வேடசந்தூர் ஒன்றிய கழக செயலாளர் ஜான் போஸ், பழனியம்மாள், பேரூர் கழக செயலாளர் பாபு சேட், தொப்பம்பட்டி ஒன்றிய கழக செயலாளர் கருப்புசாமி, முருகேசன், பாளையம் பேரூர் கழக செயலாளர் மணிமாறன், வடமதுரை ஒன்றிய கழக செயலாளர்கள் தண்டாயுதம், லட்சுமணன், பேரூர் கழக செயலாளர் பாலசுப்பிரமணி, எரியோடு பேரூர் கழக செயலாளர் அறிவாளி, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் ராஜேஷ் கண்ணா, மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் சிவபாரதி, மாவட்ட மீனவர் அணி செயலாளர் மனோகரன், மாவட்ட தொழிற்சங்க செயலாளர் ஜெயராமன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் பிரபு ராம், மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் ராஜசேகரன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் மீனாட்சிசுந்தரம், மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ரவிக்குமார், மாவட்ட இணை செயலாளர் திராவிட ராணி, முன்னாள் அரசு வழக்கறிஞர்கள் பழனிச்சாமி, மனோகரன், மாவட்ட பிரதிநிதி செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் விழிப்புணர்வு பேரணி



**ஒட்டன்சத்திரம், ஜன. 03-**

ஒட்டன்சத்திரத்தில்வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை பழனி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

பேருந்து நிலையம் முன்பு துவங்கிய பேரணி திண்டுக்கல் பழனிச்சாலையை வழியாக சென்று ரயில் நிலையத்தில் முடிவடைந்தது. பேரணியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பேரணியில் நகராட்சி ஆணையாளர் ஸ்வேதா, வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, துணை வட்டாட்சியர்கள் முருகேசன், ராமசாமி, ஏசுராஜ், தேர்தல் வட்டாட்சியர் அன்சாரி, சமுதாய அலுவலர் பாஸ்கர சேதுபதி, நகராட்சி உதவியாளர் அருள்முருகன், முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர் கௌரி சரவணன், கிராம நிர்வாக அலுவலர்கள் சிவராஜன், பாபு, கிராம உதவியாளர்கள் விஜயபாஸ்கரன், பைசல முகமது உள்ளிட்ட வருவாய்த்துறை, நகராட்சி பணியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

## பாலமேட்டில் 16-ம் தேதி ஜல்லிக்கட்டு: விழா முன்னேற்பாட்டு பணிகள் தீவிரம்



**அலங்காநல்லூர், ஜன. 03-**

மதுரை மாவட்டம் பாலமேட்டில் வருகிற 16ந் தேதி அங்குள்ள மஞ்சமலை ஆற்று திடலில் நடைபெற உள்ளது. இதையொட்டி வாடிவாசல் வர்ணம் பூசும் பணிகள் தொடங்கியுள்ளது. அதை தொடர்ந்து பார்வையாளர்கள் அமரும் மாடம், பாதுகாப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் தடுப்புகள், இதற்காக முன்னேற்பாடு பணிகள் தொடங்குவதற்கு வாகனம் மூலமாக இறக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து ஏற்பாடுகளையும், அரசு வழிகாட்டுதல் படி பாலமேடு கிராம பொது மகாலிங்கசுவாமி மடத்து கமிட்டி நிர்வாகிகளும், மற்றும் மாவட்ட நிர்வாக உத்தரவின் பேரில் பேரூராட்சிநிர்வாகத்தினரும், மற்றும் குழுவினர்களும், பணியாளர்களும் செய்து வருகின்றனர்.

## நத்தம் பகுதியில் பூத்து குலுங்கும் மாமரங்கள்



**நத்தம், ஜன. 03-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் உள்ள பரளி,வத்திபட்டி, காசம்பட்டி, லிங்கவாடி, மலையூர், முளையூர், உலுப்பகுடி, புன்னப்பட்டி, மணக்காட்டூர், குட்டுப்பட்டி, திருமலைக்கேணி, குடகிப்பட்டி உள்பட பல்வேறு கிராம பகுதிகளில் சுமார் 3 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மாந்தோப்புகள் உள்ளன.இதில் ஏற்கனவே பெய்த தொடர் மழையினாலும், ஆழ்குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சியதாலும், தற்போது மாமரங்கள் பூ பூத்து குலுங்கிய நிலையில் காணப்படுகிறது.இந்த நிலையில் வருகிற ஏப்ரல் மாதம் கடைசியில் மாம்பழ அறுவடை சீசன் தொடங்குகிறது.இது குறித்து மா விவசாயிகள் கூறுகையில், இந்த வருடம் எதிர்பார்த்த மகசூல் கிடைப்பதற்கு வாய்ப்பு குறைவாகவே உள்ளது இதற்கு தட்பவெப்ப நிலை, தேவையான மழை அளவு பெய்யவில்லை என்பதே காரணம்.மேலும் இந்த வருடம் 50 சதவீத மாமரங்கள் மட்டுமே பூ பூத்துள்ளது.இதில் கல்லாமை, காசா, பாலாமணி , உள்ளிட்ட பல ரகங்கள் ஆங்காங்கே பூத்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் புதிதாக கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளாக மூடிக் கிடக்கும் இரத்த வங்கி கட்டிடம் மருத்துவ பயனாளர்கள் ஏமாற்றம்




**திருமங்கலம், ஜன. 03-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் ரூ.25லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இரத்த வங்கி கட்டிடம் கடந்த மூன்று ஆண்டுகளாக திறக்கப்படாமல் மூடிக்கிடப்பதால் சிகிச்சைக்கு வந்திடும் மருத்துவ பயனாளர்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் செயல்பட்டு வரும் அரசு மருத்துவ மனையில் நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.விபத்துக்கள் அதிகம் நடைபெற்றிடும் தேசிய நான்கு வழிச் சாலையில் அமைந்துள்ள இந்த மருத்துவமனையில் அனைத்து சிகிச்சை பிரிவுகளும் சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் மருத்துவ பயனாளர்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.குறிப்பாக விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம் செயல்பட்டு வந்த கட்டிடத்தின் மேற்கூரை அடிக்கடி பெயர்ந்து விழுந்ததால் அந்த கட்டிடம் மூடப்பட்டு தற்போது விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம் ஆண்கள் உள் மருத்துவ பயனாளர்கள் பிரிவில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது.பெரிய விபத்துக்கள் ஏற்படும் சமயத்தில் இந்த விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவில் போதிய வசதிகள் இல்லாததால் பாதிக்கப்பட்டவர்களை அவசரகதியில் முதலுதவி செய்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ்கள் மூலம் அனுப்பி வைப்பது வழக்கமாகி விட்டது.இதனால் சரியான சமயத்தில் சிகிச்சை கிடைக்காமல் பாதிக்கப்பட்டவர்கள் பரிதாபமாக உயிரிழந்திடும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

இந்நிலையில் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் அவசர காலங்கள் மற்றும் அறுவை சிகிச்சை சமயங்களில் முக்கிய தேவையாக விளங்கிடும் அனைத்து வகையான இரத்தம் எளிதாக கிடைத்திடும் வகையில் தேசிய சுகாதார பணிகள் திட்டம் 2021-2022-ன் கீழ் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் கூடிய புதிய இரத்த வங்கி அமைத்திட வசதியாக கட்டிடம் கட்டப்பட்டது.டயாலிசிஸ் சிகிச்சை பிரிவின் பின்புறம் கட்டி முடிக்கப்பட்ட இந்த இரத்த வங்கி கட்டிடம், கட்டி முடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் திறக்கப்படாமல் மூடிக்கிடக்கிறது.மேலும் இரத்த வங்கிக்கான கருவிகளும் பயனின்றி கிடக்கிறது.இதனால் அவசர காலங்கள் மற்றும் அவசர சிகிச்சை சமயங்களில் மருத்துவ பயனாளர்களுக்கு தேவையான இரத்தம் தனியார் இரத்த வங்கிகள் மற்றும் குருதிக் கொடையாளர்கள் மூலம் பெறப்பட்டு நிலைமை சமாளிக்கப்படுகிறது.எனவே திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் அவசர சிகிச்சைக்கு வந்திடும் மருத்துவ பயனாளர்களின் வசதிக்கென புதிதாக கட்டப்பட்டுள்ள இரத்த வங்கி கட்டிடத்தை திறந்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.

## திருஉத்தரகோசமங்கை கோவிலில் ஆருத்ரா தரிசனம்: சந்தனம் களைந்த மரகத நடராஜரை தரிசித்த பக்தர்கள்



**ராமநாதபுரம், ஜன. 03-**

ராமநாதபுரம் அருகே உள்ள உத்தரகோசமங்கை கோவிலில் ஆருத்ரா தரிசனத்தையொட்டி சந்தனம் களையப்பட்ட அபூர்வ மரகத நடராஜரை நீண்ட கியூ வரிசையில் நின்று பக்தர்கள் தரிசித்தனர்.

ராமநாதபுரம் அருகே உள்ளது புண்ணியதலமான திருஉத்தரகோசமங்கை திருக்கோவில். உலகில் முதலில் தோன்றிய கோவில் என்ற வரலாற்று சிறப்புடைய இந்த திருத்தலத்தில் மங்களநாதர், மங்களநாயகி ஆகியோர் எழுந்தருளி உள்ளனர். இந்த ஆலயத்தில்மேலும் சிறப்பாக நடராஜருக்கு தனிசன்னதி அமைந்துள்ளதுடன் அதில் ஆடும் திருக்கோலத்திலான அபூர்வ பச்சை மரகத நடராஜர் சிலை அமைந்துள்ளது.

மத்தளம் முழங்க மரகதம் உடைபடும் என்பதால் ஒளி, ஒலி அதிர்வுகளில் இருந்து காக்கும் வகையில் இந்த மரகத நடராஜர் சிலை மீது ஆண்டு முழுவதும் சந்தனம் பூசப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். வருடத்தில்ஒ ருநாள் ஆருத்ரா தரிசனத்திற்கு முதல்நாள் சந்தனம் களையப்பட்டு பக்தர்களின் தரிசனத்திற்கு வைக்கப்படும். இதன்படி நேற்று மரகத நடராஜர் மீது பூசப்பட்டிருந்த சந்தனகாப்பு களையப்பட்டது. காலை 8.30 மணிக்கு சிறப்பு ஆராதனை நடைபெற்று நடராஜர் மீது பூசப்பட்டிருந்த சந்தன காப்பு களையப்பட்டு அதனை தொடர்ந்து நெய், சந்தனம், பால், தயிர், இளநீர் உள்ளிட்ட 32 வகையான அபிசேகங்கள்நடைபெற்றன. ஆபூர்வ மரகத நடராஜரின் திருமேனியில் ஆண்டு முழுவதும் பூசப்பட்டிருக்கும் சந்தனம் மருத்துவ குணம் மிகுந்தது என கருதப்படுவதால் இந்த சந்தனத்தை பக்தர்கள் போட்டிபோட்டு வாங்கி சென்றனர். நேற்று காலை முதலே பக்தர்கள் நீண்ட கியூ வரிசையில் நின்று சந்தனம் களைந்த நடராஜரை தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர்கள் ராணி பிரம்மகிருஷ்ண ராஜராஜேஸ்வரி நாச்சியார், அபர்ணாநாச்சியார் ஆகியோர் உத்தரவின்பேரில் திவான் பழனிவேல்பாண்டியன் உள்ளிட்டோர் சிறப்பாக செய்திருந்தனர். விழாவையொட்டி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சந்தீஷ் உத்தரவின்பேரில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். விழாவின் நிறைவாக இன்று(சனிக்கிழமை) ஆருத்ரா தரிசனத்தையொட்டி அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்னர் அருணோதய காலத்தில் அபூர்வ மரகத நடராஜரின் மீது மீண்டும் சந்தனக்காப்பு பூசப்படுகிறது. இதைத்தொடர்ந்து நடராஜருக்கு பல்வேறு ஆராதணைகள் நடத்தபடும். ஆருத்ரா தரிசன நாள் என்பதால் இந்த விழாவிலும் ஏராளமான பக்தர்கள் திரளாக வந்து நடராஜரை தரிசனம் செய்வார்கள். இந்தவிழாவையொட்டி இன்று(வெள்ளிக்கிழமை) ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

## ஆங்கில புத்தாண்டு: பெரியபுள்ளான் எம்.எல்.ஏவை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற மேலூர் நிர்வாகிகள்



**மேலூர், ஜன. 03-**

2026ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு தினத்தையொட்டி மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலூர் நகர் அதிமுக சார்பில் மேலூர் நகர் கழகச் செயலாளர் எஸ்.எம்.சரவணகுமார் தலைமையில், மேலூர் நகர் அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் நகர் மன்ற தலைவர் எம்.ஒ. சாகுல் ஹமீது முன்னிலையில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர்,இளம்பெண்கள் பாசறை செயலாளரும், மேலூர் சட்டமன்ற உறுப்பினருமான பி.பெரியபுள்ளான் என்ற செல்வம் எம்.எல்.ஏவை நேரில் சந்தித்து கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் வாழ்த்து பெற்றனர்.

உடன் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர்கள் நாக சுப்பிரமணியன், மாணிக்கம், ஆனைசேவுகன், அய்யங்காளை, சாலமன்சம்பத், மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி துணை செயலாளர் குமரன், மாவட்ட மாணவரணி தலைவர் மின்னல் மணி, மாவட்ட விவசாய பிரிவு துணைச்செயலாளர் முத்து, மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைச்செயலாளர் பகதூர் ராஜா, மாவட்ட அண்ணா தொழிற்சங்க துணை செயலாளர் ராமதாஸ், நகர் அவை தலைவர் பூச்செண்டு, நகர் துணைச் செயலாளர் பாண்டி லெட்சுமி, நகர் மாவட்ட பிரதிநிதிகள் திருப்பதி, அறிவழகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சூரக்குண்டு துரை அண்ணா,

நகர் அம்மாபேரவை துணை செயலாளர் மணிகண்டன், நகர் இளைஞர் பாசறை தலைவர் நளன், நகர் ஐடிவிங் செயலாளர் பிரபாகரன், ஐடிவிங் துணைச்செயலாளர் யுவராஜன்,

வட்டக் கழகச் செயலாளர்கள் சக்கரவர்த்தி, பாலமுருகன், செந்தில், பாலகிருஷ்ணன், சேகர், சுரேஷ் உட்பட ஏராளமான கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.




**மதுரை மாவட்டம் பாலமேடு அருகே மறவபட்டி கிராமத்தில் முதலாவதாக அமைந்து அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ கூடலிங்கசுவாமி. ஸ்ரீ கூட முடைய அய்யனார் சுவாமி. ஆகிய தெய்வங்களுக்கு மண்டல அபிஷேகம் மற்றும் 108 சங்காபிஷேகம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் கே.எ.பி.பங்காளிகள் செய்திருந்தனர்.**




● ஆங்கில புத்தாண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றார். அருகில் முதல்வரின் துணைவியார் துர்கா ஸ்டாலின் உள்ளார்.




● ஆங்கில புத்தாண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், தமிழக தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றார்.




● தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று வருகை தந்த துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். இந்நிகழ்வில் கவர்னர் ஆர்.என்.ரவி, ஒன்றிய தகவல் ஒலிபரப்புத்துறை மற்றும் பாராளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் எல்.முருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

# சென்னை வந்த துணை ஜனாதிபதிக்கு துணை முதல்வர் உதயநிதி வரவேற்பு

## வேலூர் பொற்கோவிலுக்கு இன்று பயணம்

**சென்னை, ஜன. 03-**

சென்னை வந்த துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை தமிழ்நாடு அரசு சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நேரில் வரவேற்றார். இன்று காலை வேலூர் பொற்கோவிலுக்கு செல்லும் துணை ஜனாதிபதி அங்கு சக்தி அம்மாவின் 50-வது பொன்விழா ஜெயந்தியில் பங்கேற்கிறார்.

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் தமிழ்நாட்டில் நேற்றும் (வெள்ளிக்கிழமை), இன்றும் (சனிக்கிழமை) சுற்றுப்பயணம் செய்கிறார். இதற்காக நேற்று காலை சென்னை விமான நிலையம் வந்த துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணனை தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வரவேற்றார். இதனை தொடர்ந்து, தமிழக அரசு சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பூங்கொத்து மற்றும் புத்தகம் ஒன்றையும் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு பரிசாக அளித்து வரவேற்றார்.

இதன்பிறகு அவர் தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் அவர் பங்கேற்றார். இதனைத்தொடர்ந்து நட்சத்திர விடுதியில் நடைபெறும் விழாவில் பங்கேற்றார். மாலையில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் பொது வரவேற்பு விழாவிலும், அதனைத்தொடர்ந்து லோக் பவனில் கவர்னர் ஆர்.என்.ரவி நடத்தும் குடிமை வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.

பின்னர் இன்று காலை அவர் வேலூர் பொற்கோவிலுக்கு செல்கிறார். அங்கு சக்தி அம்மாவின் 50-வது பொன்விழா ஜெயந்தியில் பங்கேற்கிறார். இதனைத்தொடர்ந்து பிற்பகலில் சென்னை திருவல்லிக்கேணி கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் சித்தர் தின விழாவில் சி.பி.ராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார்.

# மாநில அரசுகளும், மத்திய அரசும்... (1-ம் பக்க தொடர்ச்சி)

மாத்திரைகள் சிக்கின. நாட்டுக்குள் பல்வேறு வழியாக போதைப் பொருள் வருகிறது, அதனை மத்திய, மாநில அரசுகள் இணைந்து பணியாற்றி, பாதையை அடைக்க வேண்டும். போதைப் பொருளை புழக்கத்தில்விடும் குற்றவாளிகளில், நைஜீரியா போன்ற நாட்டைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். போதைப் பொருள் ஒழிப்பு என்பது சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு. கலைத் துறையை சேர்ந்தோர் பொறுப்புணர்வோடு படைப்புகளை தரவேண்டும், அதன் பயன்பாட்டை பெருமைப்படுத்தக் கூடாது.

### குழந்தைகளின் மீது...

பெற்றோர்கள், குழந்தைகளின் மீது பாசத்தை காண்பிக்க வேண்டும். அதை மறுக்க முடியாது. ஆனால் அதற்காக அவர்கள் பாதை மாறிச் செல்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. பெற்றோர்கள், குழந்தைகளை பொறுப்புடன் வளர்க்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக அம்மா, அப்பா, அக்கா, தங்கை ஆகியோர் வீட்டில் உள்ள குழந்தைகள் வழி மாறிப் போகாமல் இருப்பதை கண்காணிக்க வேண்டும்.

### வெறுப்பு பேச்சுக்கள்...

ஒருவருக்கு ஒருவர் மனசு விட்டு பேச வேண்டும். மனம் விட்டு பேசினாலே பாதி பாரம் குறைந்து விடும். தவறான பாதைக்கு செல்லக் கூடிய தேவை நிச்சயம் இருக்காது. அதேபோல ஆசிரியர்கள், சமூக பிரபலங்கள் போதைப் பொருள் குறித்து விழிப்புணர்வை தொடர்ந்து பரப்ப வேண்டும். சாதி, மத பிரச்சினைகள் தற்போது பரவலாக காணப்படுகின்றன. மத்திய அமைச்சர்கள் உட்பட பதவிகளில் இருக்கக்கூடியவர்கள் வெறுப்பு பேச்சுக்களை பேசிவருகின்றனர். இது இரு பிரிவினருக்கிடையே மோதலை தூண்டும் விதமாக இருக்கிறது.

### மகிழ்ச்சியாக...

இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயந்து வாழக்கூடிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் சமயத்தில் நாட்டில் நடைபெற்ற பல்வேறு தாக்குதலை பற்றி அனைவருக்கும் தெரியும். சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலைமை நமது நாட்டில் இருந்ததா? இவ்வாறு அவர் பேசினார்.



● 2026 ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமியை அ.தி.மு.க. நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். இதன் ஒரு பகுதியாக அ.தி.மு.க. அமைப்பு செயலாளரும், முன்னாள் சபாநாயகருமான தனபால் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

### தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில்

# ஜனவரி 19-ல் தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரை

**சென்னை, ஜன. 03-**

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் ஜனவரி 19-ஆம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றிட 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தி.மு.க. தலைமை வெளியிட்ட அறிக்கையில், 'பெரியார், அண்ணா, கருணாநிதி வழியில் மகளிர் மேம்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு 'மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்', கல்வி கற்கும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண் திட்டம்', வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான 'தோழி விடுதி', இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் முதல்வர் ஸ்டாலின் தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், 'பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ'' என்று சொல்லத்தக்க வகையில், ''வெல்லும் தமிழ்ப் பெண்கள்'' தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றிட, தி.மு.க. முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையில், பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில், பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, திருச்சி சிவா, ஆ.இராசா, அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்பில் வருகிற 19.01.2026 திங்கட்கிழமை, மாலை 4.00 மணி அளவில், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் ''வெல்லும் தமிழ்ப் பெண்கள்'' தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெற உள்ளது.

தி.மு.க. செயலாளர்/பொறுப்பாளர்களான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன், காடுவெட்டி தியாகராஜன், க.வைரமணி, க.அன்பழகன், வீ.ஜெகதீசன், நிவேதா முருகன், கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல் அமைச்சர்கள் கோவி.செழியன், சிவ வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அருண்நேரு, முரசொலி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வார்கள். நிறைவாக, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் நன்றியுரையாற்றுகிறார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோவில் தேரோட்டம் கோலாகலம்

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்தனர்

**கடலூர், ஜன. 03-**

சிதம்பரம் நடராஜர் கோவில் தோரட்டம் நேற்று (ஜன.2) நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சிவ சிவா என்ற முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். இன்று ஆருத்ரா தரிசனம் நடைபெறவுள்ளது.

உலகப் புகழ்பெற்ற சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோவிலில் சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்தியின் மார்கழி ஆருத்ரா தரிசன உற்சவம் கடந்த 25-ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. இதனை தொடர்ந்து கடந்த 26-ம் தேதி வெள்ளி சந்திர பிரபை வாகனத்தில் சுவாமி வீதிஉலாவும், 27-ம் தேதி தங்க சூரிய பிரபை வாகனத்திலும், 28-ம் தேதி வெள்ளி பூத வாகனத்திலும், 29-ம் தேதி வெள்ளி ரிஷப வாகனத்தில் தெருவடைச்சான் வீதி உலாவும், 30ம் தேதி வெள்ளி யானை வாகனத்திலும், 31-ம் தேதி தங்க கைலாச வாகனத்திலும் சுவாமி வீதி உலா நடைபெற்றது.

நேற்று முன்தினம் இரவு (ஜன.1) தங்க ரதத்தில் பிச்சாண்டவர் வெட்டுக்குதிரையில் வீதி உலா நடைபெற்றது. நேற்று (ஜன.2) வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெற்றது. மலர் மாலைகள் மற்றும் தங்க நகைகளால் ஸ்ரீநடராஜர், சிவகாமசுந்திரி அம்பாள், விநாயகர், சுப்ரமணியர், சண்டிகேஸ்வரர் ஆகிய சாமிகள் மேலதாளம் முழங்கிட, வேத மந்திரங்கள் ஓதிட அதிகாலை 4.30 மணியில் இருந்து 5.30 வரை தனித்தனி தேர்தலில் எழுந்தருளினர். இதனைத் தொடர்ந்து கீழவீதி நிலையில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் சிவ, சிவா முழக்கத்துடன் தேர்களின் வடம் பிடித்து இழுத்தனர்.

தேர்கள் முக்கிய வீதிகளான கீழ வீதி, தெற்கு வீதி மேல வீதி, வடக்கு வீதிகளில் வீதியுலா சென்று இரவு கீழ வீதி நிலையை அடையும். ஒவ்வொரு வீதியுலும் மண்டகப்படிதாரர்கள் சாமிகளுக்கு படையல் செய்வார்கள். தேர்கள் வீதியுலாவையொட்டி நான்கு வீதிகளிலும் பெண்கள் மாகோலமிட்டிருந்தனர். தேர்களுக்கு முன்னாள் சிவனடியார்கள் தேவராம், திருவாசகம் பாடியபடியும், வேத விற்பன்னர்கள் வேத மந்திரங்கள் ஓதியபடியும் சென்றனர்.

முக்கிய திருவிழாவான தரிசன விழாவையொட்டி இன்று (ஜன.3) சனிக்கிழமை அதிகாலை சூரிய உதயத்துக்கு முன்பு காலை 4 மணி முதல் 6 மணி வரை சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்திக்கு மகாபிஷேகம் நடைபெறுகிறது.



● மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்தில் கட்சி வளர்ச்சிப்பணிகள் குறித்து தேர்தல் பணி குறித்தும் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.